பதினாப் பத்திரிகையாகப்பதிவுசெய்யப் பெற்றது.

இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

விளம்பரம் (1889 வருஷம் முதல் வெளியாகிறது)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாதுஸு ஆடிமீ ௫௨ (1936 ஜூலாய் 20) திங்கட்கிழமை { இலக்கம்—உகூ

திருவள்ளுவரும் திருக்குறளும்

குறட்பாக்களுக்கு இயற்றப்பெற்ற உரைகள்

குறளைப்பற்றிய புகழுரைகள்

(மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் தலைமைப் பேருரை)

(முற்றொடர்)

ஒரு செய்யுள் நூலுக்கு வசனத்தில் உரை இயற்றுவதோடு செய்யுளுருவத்திலேயே உரை இயற்றுவதும்உண்டு. இது மொழியிற் பெருவழக்கு. தமிழ்நூல்களிலும் சிவஞான போதத்துக்குரிய உதாரண வெண்பாக்களும், சித்தியார் முதலியனவும உரை நிலையிலேயே உள்ளன. தேவாரப் பதிகங்களில் திருப்பாசுரம் முதலிய சிலவற்றிற்குப் பெரியபுராணத்தில் சேக்கிழார் உரைவிரித்துச் செல்கின்றார். இவற்றைப் போலவே திருக்குறளுக்கும் செய்யுளுருவத்தில் உரையுண்டு. தனியே குறளுரை யென்னும் பெயர் பெறாவிட்டாலும் அவை உரைகளின் தன்மையை உடையனவே.

இரங்கேச வெண்பா, சிவ சிவ வெண்பா, தினகர வெண்பா, வடமலை வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா முதலியன திருக்குறளுக்கு உதாரணம் கூறும் நூல்கள். உரை வகைகளிலே உதாரணம் கூறுதலும் ஒன்று. ஆதலின் முற்கூறிய நூல்கள் திருக்குறளின் உரை நூல்களென்றே கூறல் தகும். சினேந்திர வெண்பா வென்னும் ஒரு நூல் ஒரு சைனப்பெரியரால் இயற்றப்பட்டதென்றும், அதில் ஒவ்வொரு (குறளுக்கும் ஒவ்வொரு வரலாறு உதாரணமாகக் காட்டப்பெற்றுள்ளதென்றும், 1330 குறளுக்கும் 1330 வெண்பாக்கள் அந்நூலில் உள்ளனவென்றும், பல வருஷங்களுக்கு வேதாரணயத்திலிருந்த சைன நண்பரொருவர் கூறக் கேட்டிருக்கின்றேன்; அவர் அந்நூலிலுள்ள சில வெண்பாக்களையும் சொல்லிக் காட்டினார். முதுமொழி மேல்வைப்பு என்றொரு நூல் உள்ளது. அதில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பாலென்னும் மூன்றுக்கும் திருக்குறளாகிய திருவள்ளுவப் பயனையும் வீட்டுப்பாலுக்குச் சித்தாந்த சாத்திரமாகிய திருவருட்பயனையும் அமைத்த செய்யுட்கள் உள்ளன.

இவற்றையன்றித் தமிழ்நூலாசிரியர்கள்பலர் திருக்குறள் கருத்துக்களை மனநிற்கொண்டு அவற்றிற்கு உரை கூறுவார் போலத் தம் நூல்களிற் பல செய்யுட்களை அமைத்திருக்கிறார்கள்.

'ஆன்முலையறத்தவறனில்லோர்க்கும் மாணிழைமகளிர் கருச்சிதைத்தோர்க்கும் பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும் வழுவாய் மருங்கிற் கழுவாயுமுள வென
ஞலம்புடை பெயர்வ தாயினுமொரு வன் செய்நி கொன்றோர்க்குய்கியில்லென மறைப்பாடிறறே ஆயினாணவ'

என னும் புறநானூற்றடிகள், 'எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்யவிலைச் செய்கன்றி கொன்ற மகற்கு,

என்னும் அருமைக்குறளின் விரிவுரையைப் போல விளங்குதல் கவனிக்கத் 'தக்கது. நக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர், 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்பதற்கு 'பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும்' என்று பதவுரை எழுதிவிட்டு விசேட வுரையில் 'பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை அபத்தலும் பசுவினைக் கருவினைச் சிதைத்தலும் பார்ப்பார்த்தப்புதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்' என்று எழுதினார். முற்கூறிய புறநானூற்றின் அடிகளையே அவர் எளிதில் உரை நடையிற் கூறியிருத்தல் காண்க.

'இடுக்கண் வருங்கால் நகுக வதனை
படுத்துந்துன்ப தம்தொப்ப தில்'

என்னுங் குறளுக்கு உரை

'இடுக்கண்வந் துற்றகாலை
எரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றுனுமின்றி
நகுகதாம் நக்க போழ்தவ்
விடுக்கணை யரியு மெங்காம்
இருந்தழு தியாவ ருய்ந்தார்
வடுப்படுத் தென்னை யாண்மை
வருமவர் துறுங்க ளன்றே'

என்னுஞ் சிந்தாமணிச் செய்யுள் அமைந்திருக்கின்றது.

டக்ராய் நடித்தவருக்கு 1வருட மறியல்

பழகாத பழக்கம் பழகாதே!
கூடாதகூட்டம் கூடாதே!

வெள்ளவத்தையில் வசிக்கும் செல்லையா - வைத்தியலிங்கம் என்னுமொருவர் கொழும்பு அப்போதிக்கரிஸ் வியாபார சமுதாயத்திற் சென்று தாமே மறியல்வீட்டு டக்ரர் இராசசிங்கமென்று பொய் சொல்ல அத்தச் சமுதாயத்திலுள்ளார்க்கு கமபிக்கை வரச்செய்து ரூபா 102 - 98சதம் பெறுமதியுள்ள பிறண்டி, உவிஸ்கிப் போத்தல்கள், வேறும் பொருள்களைக் கடனுக்கு வாங்கிக்கொண்டு கரந்துவிட்டார். இவர்செய்த வஞ்சனையை அறிந்து மேற்படி சமுதாயத்தார் இவருக்கு விரோதமாகக் கொழும்புப் பெரிய நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடர்ந்தனர்; எதிரி தான் குற்றவாளியென்று ஒப்புக்கொண்டமையினால் நீதிபதி எதிரிக்கு 1வருடக் கடுஞ் சிறை விதித்தனர். "சாதிக்கெல்லாம ஒரு வடுவேதரத்தான் பிறந்தாய் வகுதடுவே"

ஐயபேரிகை

பல்லவி

ஜய பேரிகை கொட்டடா—கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா!

சரணங்கள்

1 பயமெனும் பேய்தனை யடித்தோம்—பொய்மை*ப்
பாம்பைப் பிளந் துயிரைக் குடித்தோம்
வீய னுல கனைத்தையும் அடுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம். (ஜய பேரிகை)

2 இரவியி னொளி யிடைக் குளித்தோம்—ஒளி
யின் னமுதினை யுண்டு களித்தோம்
கலிவிலில் வந்துயிர்க் குலத்தினை யழிக்கும்
காலன் நடு நடுங்க விழித்தோம், (ஜய பேரிகை)

3 காக்கை, குருவி யெங்கள் ஜாதி—நீள்
கடலு மலையு மெங்கள் கூட்டம்
நோக்குந் திசை யெலாம் நாமன்றி வேறில்லை!
நோக்க, நோக்கக் களியாட்டம். (ஜயபேரிகை)

* "துன்ப" என்றொரு பாடமும் உண்டு.

சுப்பிரமணியபாரதியார்.

"நாமார்க்குங் குடியல்லோம்"

மனிதப்பிறவிக்கு உயிரணியாயுள்ள உரிமையைப் பாதுகாத்தல் அவசியம்

திரு. வி கலியாணசுந்தர முதலியார் எழுதியது

'நாமார்க்குங் குடியல்லோம்' என்பது அப்பர் வாக்கு. இத் திருப்பாடல் 'நவசக்தியின் தலைப்பில் அணிபெற விளங்குவது; தமிழ்நாட்டின் கானுபக்கங்களிலும் ஓதப் பெறுவது. 'நாமார்க்குங் குடியல்லோம்' என்று ஓதல் எளிது; அதன்படி நடத்தல் அரிது. 'சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாஞ் சொல்லிய வண்ணஞ் செயல்' எனவருஉக் திருக்குறளை நோக்குக. 'நாமார்க்குங் குடியல்லோம்' என்று அருளிய பெரியார் தாம் அருளிய வாறே நடந்துங் காட்டினார். அதனை அவர்தம் வரலாற்றிற் காண்க.

'நாமார்க்குங் குடியல்லோம்' என்பதில் செறிந்துகிடக்கின்ற பொருள்கள் பல. பெரியோர் திருவாக்குகளில் பலவிதப் பொருள்கள் செறிதல் இயல்பு. அவைகளை உணர முயல்வது அறிவுடைமை.

'நாமார்க்குங் குடியல்லோம்' என்னுந் திருவாக்கில் மிளிரும் பொருள்களையெல்லாம் விளக்குதற்கு அருகனல்லன். எனது சிற்றறிவுக்கு இவ்வளவியில் தோன்றுவதைச் சுருக்கச் சொல்லமுயல்கிறேன் பாட்டிற் செறிந்துள்ள பொருள்களை இருவிக்மாகத் தொகுத்துக் கொள்ளலாம். ஒன்று அப்பொருள்; மற்றொன்று புறப்பொருள்.

மனிதப்பிறவிக்கு உயிரணியாயிருப்பது உரிமை. அவ்வுரிமையைப் பாதுகாக்க வேண்டுவது ஒவ்வொருவருடைய கடமையாகும். உரிமை காவாத பிறவி பிறவியாகாது. உரிமைக்காக உலகில் எவ்வளவு போராட்டங்கள் நடைபெறுகின்றன. அவ்வளவு போராட்டங்கள் நடைபெற்றும் உலகம் உரிமை இன்பம் துய்க்கிறதா என்பது கூர்ந்து சிந்திக்கற்பாலது. உரிமை இன்பம் துய்க்கும் நிலைமையை இன்னும் உலகம் அடையவில்லை. இதற்குக் கவலையைச் சிறந்த காரணமாகக் கூறலாம். 'உரிமை பெற்ற நாடுகள்' என்று சொல்லப்படும் நாடுகளிலாதல் கவலை இல்லாமல் இருக்கிறதா? இல்லையே! அவைகளும் கவலைக்கு இரையாகியே வருகின்றன. ஐரோப்பிய அமெரிக்கத் தேசங்களெல்லாம் 'சுயராஜ்யம்' பெற்றன என்று உலகங் கருதுகிறது. அவ்விடங்களிலாதல் கவலையில்லாமல் இருக்கிறதா? இத்தாலி அபிஸீனியாவைப் பற்றிய நாள்முதல் மேல்நாடு உற்றுவருங் கவலைகளோர் அளவும் உண்டோ?

இன்பத்துக்கும் துன்பத்துக்கும் மனிதனே காரணன். மனிதன் இவ்வுலகிலேயே எக்காலும் இன்பத்தை நுகர்ந்து வாழ்தல்கடுமை. இஃது இயலாததொன்று என்று பலர் நினைக்கலாம். அவ்வாறு நினைப்பது தவறு. 'நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம் நரகதிலிடர்ப்படோம் கடனை இல்லோம் ஏமாப்போம் பிணியறியோம் பணிவோர் மல்லோம் இன்பமே எக்காலும் துன்பமில்லை" என்று பாடியவரும் மனிதரே அவர் இவ்வுலகிலிருந்தே இப்பாட்டை அருளினார்: அவர் இவ்வாறு இறுமாந்து கூறுதற்குத் தம்மைப் பண்படுத்திக் கொண்டார். அதனால் அவர் பெரியவரானார்.

எக்காலும் இன்பமாய் வாழுதற்கு என்செய்தல் வேண்டும்? முதலாவது மனிதன் தன்பாலுள்ள அகக் குற்றங்களைக் களைய முயல வேண்டும். அகக் குற்றங்களின் பரிணமமே புறக்குற்றங்கள். அகமே புறம். அகம் தூய்மை யுற்றால் புறந்தானே தூய்மையுறும்.

மனிதப் பிறவி எல்லாப்பிறவிகளினும் விழுமியது. மற்றப் பிறவிகளில் விளங்காத ஓர் அறிவு மனிதப் பிறவியில் விளங்குகிறது. அதுவே பகுத்தறிவு என்பது. அவ்வறிவு விளங்குதற்குரிய வாய்ப்பு மனிதப் பிறவிக்கு உண்டு. அவ்வறிவை மேன்மேலும் வளர்த்து அதன மயமாக மனிதன் ஆதல் வேண்டும். அப் பேரறிவு வளர வளர மனிதனிடத்துள்ள அகக் குற்றங்களும் முறை முறையே தேய்ந்து தேய்ந்து போகும். மனிதன், தன்பால விளங்கியுள்ள பேரறிவென்னும் தெய்வ அறிவை வளர்க்க முயல்கிறானா?

மனிதன் விலங்குக்கும் தெய்வத்துக்கும் இடைப்பட்டவன். அவனிடத்தில் விலங்கியலும் உண்டு: தெய்வ இயலும் உண்டு. தெய்வ இயலைப் பெருக்குதற்குத் தன்னை புரிவதேபகுத்தறிவுஎனப்படும். மனிதனிடத்தில் அழுக்காறு, அவா, வெகுளி முதலிய விலங்கியல்புகளும

தொடர்ச்சி 2ம் பக்கம்.

தொடர்ச்சி 2ம் பக்கம்.

திருவள்ளுவரும் திருக்குறளும்

1ம் பக்கத் தொடர்ச்சி

'தொழுதகை யுள்ளும்
துறுமுடி யகத்துஞ் சோர
அழுதகண் ணீரினுள்ளும்
அணிகலத் தகத்து மாய்ந்து
பழுதகண் ணிரிது கொல்லும்
படையுட னொடுங்கும் பற்று
தொழுகையார் கண்ணுந் தேற்றம்
தெளிகுற்றார் விளிகுற்றாரே'

என்னும் சிந்தாமணிச் செய்யுள்

'தொழுகையுள்ளும் படையொடுங்கு
மொன்னார்
அழுதகண் ணீரு மினைத்து'

என்னுங் குறளின் விரிவென்ற கூறலும் வேண்டுமோ?

'வாய்மையெனப் படுவ துயாதெனி
ன் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்'

என்னும் குறளுரையில் பரிமேலழகர் அதனாலும் 'நீங்குயவளாதாயின் மெய்ம்மைகாரம்' என்ற எழுதியுள்ளார். வாய்மைச் சொல்லும் தீங்கு பயப்பதாயின் பொய்ம்மையாகும் என்று அவர் சொன்னதாற் கூட இவ்வுரையையே வேறு வகையில் அழகிய செய்யுளாநுவத்தில் சிவப்பிரகாச சுவாமிகள்

'வாய்மை யெனினும் புலரிபைக்
கூறுதல் வாராண்டாள்
சேய்மை யுறுதங் கொழுநர்தங்
கூட்டஞ் கிறைத் தொக்குச்
தீமை பயத்தலை யாவேங்கை
நாயகர் செய்தவறத்
தூய்மை யுணர்ந்தவர்
வாய்மையன்
றுமெனச் சொல்லுவரே'

என்று அமைத்திருக்கின்றனர்.

விநாயக புராணம் அரியேற் படலத்தில் குறட்பாக்கள் பலவற்றிற்கு உரை காணலாம். இங்ஙனம் அமைந்த தமிழ் நூற் பகுதிகள் அளவில.

பிற சிறப்புக்கள்

குறட் கருத்துக்களை எடுத்தாளத் தமிழ்நூலே இல்லையென்ற கூறவது மிகையாகாது தமிழ்ப்புலவர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நூல்களில் திருக்குறளே முதன்மை வாய்ந்த தென்பதில் ஐயமில்லை. நீதி நெறி விளக்கம் குறட்கருத்தைச் சுருக்கமாகவே வேறு உருவத்தில் அமைத்துச் சொல்லும் நீதிநூலாகும். கும்பகோணம் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக இருந்த ஸ்ரீமான் சி. நியாகராஜச் செட்டியார் அந்நூலை "இது குறள்பருவத்தில் பெற்ற பிள்ளையைப் போன்றது" என்பார்.

திருக்குறள் தமிழுக்குச் சிறப்பாக அமைந்த நூலென்பது "அகர முதல்" என்ற தமிழ் நெடுங்கணக்கின் முதலாகிய அகரத்தில் தொடங்கி, 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று மதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்" என்ற ஈறாகிய னகரத்தில் முடிந்தமையால் பெறப்படுகின்றது.

தமிழ் என்னும் சொல்லில் முதலாகிய தமிழ்ச் சிறப்பெழுத்து ஒன்று அமைந்திருப்பதுபோலக் குறள் என்பதில் நகரமாகிய சிறப்பெழுத்து அமைந்திருக்கின்றது.

தமிழ் நூல்களிற்சிறந்தனவென்று சில நூல்களைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்துச் சில சில செய்யுட்களின் வாயிலாகத் தெரிவிக்கின்றனர். அவர்கள் தங்கள் தங்கள் மனத்துக்கு உவந்த சிலவற்றைக் கூறியிருத்தலின் ஒருவர் கருத்தோடு வேறொருவர் கருத்து வேறுபடுகின்றது. ஆயினும், அங்ஙனம் கூறும் பலருடைய செய்யுட்களிலும் திருக்குறளின் பெயர் காணப்படுகின்றது.

"தேவர் குறளும் திருநான்
மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்-
கோவை
திருவாசகமுந் திருமூலர்
சொல்லும்
ஒருவர்சக மென்றுணர்"

என்பது நல்வழிப்பாட்டு. இதிற் கூறப்பட்ட ஏழு நூல்களில் குறள் தன்மை பெற்ற விளங்குகின்றது.

'வள்ளுவர் சீர் அன்பர்மொழி
வாசகத் தொல்காப்பியமே
வெள்ளுபரி மேலழகன்
செய்தவுரை - விள்ளு புகழ்த்
தொண்டர் புராணம்
சொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்"

என்பது ஒரு சைவப் பெரியார் வாக்கு. தண்டமிழில் மேலாம் தரத்து நூல்களாகிய ஆறுள் திருக்குறள் முதன்மை பெற்றுள்ளது.

'திருத்தக்க மாமுனி
சிகாமணி கம்பர்
திருத்தக் கவித்திறமும்
வேண்டேன்-உருத்தக்க
கொன்குவேண் மாக்கதையைக்
கூறேன் குறளனுக்கும்
எங்கெழிலென் ஞாயிறொக்கு"

என்பதில் எதிர்மறை முகத்தினாற் சிறப்பித்த நூல்கள் நான்கனுள் முடிபாக மிளர்கின்றது.

"தொல்காப்பியத் திருவள்ளுவர் கோவையார் மூன்றினும் முழங்கும்" என்று இலக்கணக்கொத்துடையார் பாராட்டும் மூன்றில் நடுநாயகமாக உள்ளது.

"நாலும் இரண்டும் சொன்னுக் நறுநீ" என்னும் பழமொழியிலுள்ள இரண்டில் ஒன்றாக அமைந்திருக்கின்றது. இத்தகைய பெருஞ் சிறப்பை வேறு எந்த நூல் பெற்று விளங்குகின்றது?

திருமால் உவமை

திருக்குறளைத் திருவள்ளுவமாலை பலபடப் பாராட்டுகின்றது. அது வேதத்தைப் போன்ற தென்றும் மூவேந்தர் முடியிற் சூடும் மாலை போன்றதென்றும், முப்பாலில் நாற்பால் மொழிவதென்றும் சிறப்பிக்கின்றது. அந்நூல் ஒரு செய்யுளின் குறளுக்குத் திருமாலை உவமிக்கின்றது. திருமால் தம் திருவடிகள் இரண்டாலும் புறத்தே தோன்றும்உலகத்தை அளந்ததுபோலத் திருக்குறள் தன் அடி இரண்டாலும் மக்களின் அகத்தே தோன்றுவனவற்றை யெல்லாம் அளந்ததென்பதை அச் செய்யுளின் கருத்து. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் வெங்கையுலாவில் இங்ஙனமே இந்நூலுக்கும் திருமாலுக்கும் ஒப்புக் கூறுகின்றனர். அங்கே அவர் கூறும் பொருத்தங்மை வேறு. திருவள்ளுவர் ஒரு பொருளை வற்புறுத்தும் பொருட்டுப் பத்து முறை கூறியதுபோலத் திருமால் ஒரு கருத்தை வற்புறுத்தப் பத்து அவதாரமெடுத்தாரென்பது அப் பகுதியின் கருத்து

பிற புகழுரைகள்

சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் "பொய்யில் புலவன் பொருளுரை" என்று குறளைப் பாராட்டுகின்றார். சிவப்பிரகாசர் 'கவித்தமிழ் வேதமென்று போற்றுகின்றார். தமிழகிடுநூலென்னும் ஒரு பிரபந்தம் தமிழைக் குழந்தையாக உருவகம்செய்து வருணிக்கையில்,

'முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிகவளர்த்தார், என்றுசொல்லுகின்றது. குழந்தையின் வளர்ச்சிக்குப் பால் எங்ஙனம் உதவுமோ அங்ஙனமே தமிழின் வளர்ச்சிக்குக் குறள் மிக உதவுகின்றது என்னும் அரியகருத்து இதனால் வெளியாகின்றது. இவ்வாறே குறளைப் பாராட்டிய நூற்பகுதிகளைத் தொகுத்துக் கூறுவதாயின் அது மிகவரியும்.

—தொடரும்

"நாமார்க்குங் குடியல்லேம்"

1ம்பக்கத் தொடர்ச்சி

எழுகின்றன. அவற்றைச் சாய்த்து, இவற்றைப் பெருக்கவே மனிதப் பிறவி இறைவனால் அளிக்கப்படுமுதலிய வற்றின் திருவிளையாடல்கள் பலப்பல. அவை அளப்பரியன மனிதனிடத்திருந்து எழும் பொறாமை முதலியனவே வாள்கள்; அப் பாக்கிகள்; பீரங்கிகள்; படைகள் போர்களை; கொலைகள்; இரத்த ஆறுகள் பொறாமையும் அதன் இனமும் உலகை அரிக்கின்றன; எரிக்கின்றன. உலகம் அவைகட்கு இரையாகிறது.

ஒரு குடிசையைப் பற்றுக் தீ; சுற்றிச் சூழ்ந்துள்ள மற்றக் குடிசைகளையும் பற்றுமன்றோ? அர்த்தபோல ஓரிடத் தெழும் பொறாமை மற்ற விடங்களிலும் பரவும்; பரவிப் பரவிப் போராட்டங்களை உண்டுபண்ணும். இத்தாலி ஜெர்மனி ஜப்பான் முதலிய தேசங்கள் எக்கிலையிலிருக்கின்றன? அவைகள் தங்களிடம் ஜனங்கள் பெருகி விட்டார்களென்றும், நெருக்கடி நேர்ந்திருக்கிறதென்றும், அதனால் பிற தேசங்களைப் பற்ற வேண்டுமென்றும் கூக்குரலிடுகின்றன. பிற தேசங்களை வேட்டையாட அவைகள் இரவும் பகலும் எண்ணி எண்ணிச் சூழ்ச்சி செய்கின்றன. அந்தோ! அவா ஈனும் பொறாமையின் ஆற்றல் என்னே!

பகுத்தறிவுபெற்ற இக்கால மனிதன் அவ்வறிவால் இன்பத்தை நுகர்கிறானா? அவன், நாளுக்குநாள் துன்பத்தையே பெருக்கிச் சாகிறானவன் எக்காளும் இன்புடையனாய் வாழ்கிறானில்லை. அவன் அழுக்காறு, அவா, வெகுளி முதலிய அகக்குற்றங்கட்கு ஆளாக வாழ்கின்றவனே மனிதன். அவனே வீரன். நெப்போலியன் வீரனல்ல. ஹிலே வீரனல்ல, முஸோலினி வீரனல்ல, ஹிட்லர் வீரனல்ல, பின்னை எவர் வீரர்? கிறிஸ்து வீரர்; அப்பர் வீரர்; தால்ஸ்தாய் வீரர்; மகாத்மா காந்தி வீரர். இவரனையரே வீரர் - வீராவர். இப்பெரியோர் எவர்க்கும் குடியல்லாதவர்; "நாமார்க்குங் குடியல்லோம்" என்று இறுமாந்து கூறவல்லார்; எழவல்லார்.

"நான் - ஆர்க்குங் குடியல்லோம்" இதற் பேர்தான் 'யார்க்கும்" என்னும் சொல் எவரைக் குறிப்பது? (அஃது அகக் குற்றங்களையே பெரிதும் குறிப்பது.) பொறாமையாரை அவாவாரை-வெகுளியாரை - இவர்தஞ் சகோதரரை - குறிப்பதெனக. இவர்கட்கு அடிமையாகாத வாழ்வே உரிமை வாழ்வு-சுதந்திரவாழ்வு-சுய ராஜ்யவாழ்வு அப்பர் இப் பெருவாழ்வு பெற்றார். 'நாமார்க்குங் குடியல்லோம்' என்று இன்பில் இறுமாந்து எழுந்தார். இவரே எவர்க்குங் குடியல்லாதவர்; நமனையஞ்சாதவர்; நரகத்திலிடப்படாதவர்; நடலை இல்லாதவர்; பிணி யறியாதவர்; பொன்னுக்கும் பொருளுக்கும் பிற இழிவுக்கும் மன்னரையும் பணியாதவர்; எக்காளும் இன்பத்தில் மூழ்கிக் கிடப்பவர்.

பொறாமை முதலிய அகக்குற்றமற்றவர் பிறரை வேறுகக் கருதார்; பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கொள்வர்; எவர்க்குந் தீங்கு நினையார்; செய்யார். பிறர் கெடவே அவருக்குத் தங்கெடுவரகத் தோன்றும். தம்முயிரில் விளங்கும் ஈசனே பிறவுயிரில் விளங்குதலும் அவருக்குப் புலனாகும். அவர் எவர்க்கும் எதற்கும் அஞ்சாதவர்; எவர்க்கும் அடிமையாகாத பெருவாழ்வினர். அவர்தம் பெருமை பேசலுண்ணாது. "பெருமைமாரல் தம்மை ஒப்பார் பேனலால் எம்மைப் பெற்றார்-ஒருமையால் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்றும் இல்லார்-அருமையாம் நினையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்-இருமையுங் கடந்து நின்றார் இவரா நீ அடைவாய்....." என வருஉம் பெரிய புராணப் பாடலைப் பார்க்க.

அகக்குற்றங்களைந்து ஆருயிர்க்கு அபயராய் வாழ்வாரே சத்தியர்க் கிரிகள் எனப்படுவர். பிரகாலதன், அப்பர், கிறிஸ்து முதலிய பெரியோர் வரலாற்றைக் கூர்ந்து ஆராய்க. மகாத்மா காந்தி இப் பெருந் துறையில் நின்றே இந்தியாவாயிலாக உலகுக்கு கலஞ்செய்கிறும்புகிறார். அவர்தம் விருப்பத்துக்கு உண்மையில் துணைபோக இந்தியா இன்னும் முன்வரவில்லை. காந்தியடிகள் சலிப்பின்றித் தமது தொண்டை ஆற்றிவருகிறார் என்றாதல் அவர்தங் கொள்கை ஆக்கம் பெற்றே தீரும். இந்தியா சத்தியத்துக்கு உரியதே. ஆனால் இப்பொழுது அது தன்னிலையினின்றும் பிறழ்ந்து வீழ்ந்து கிடக்கிறது இதற்குக் காரணம் மேல்நாட்டுக் கூட்டுறவேயாகும்.

மேல்நாட்டிலிருப்பது 'கிறிஸ்துவ ராஜ்யம்' என்று சொல்லப்படுகிறது, கிறிஸ்துராஜ்யம் அல்லதே இருக்கிறதா? இன்னும் கிறிஸ்துராஜ்யம் அங்கேவரவில்லை. கிறிஸ்துவின் பெயரால் அரசுகளிருக்கின்றன; கோயில்களிருக்கின்றன; சபைகளிருக்கின்றன; பாதிரிமார் இருக்கிறார்; கோடிக கணக்கில் பைபிள் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. கிறிஸ்து நாமம் முழங்கப்படுகிறது. இவ்வளவிருந்தும் கிறிஸ்து ராஜ்யம் அங்கில்லை. என்று சொல்லப் பெரிதும் வருந்துகிறேன்.

கிறிஸ்துவச் சாம்ராஜ்யங்களுக்குத் தலைநகர் எது? ரோமபுரி. ரோமபுரி எங்கே இருக்கிறது? இத்தாலியிலிருக்கிறது. இத்தாலி எங்கேயிலிருக்கிறது? சொல்லவும் வேண்டுமோ? அங்கே கிறிஸ்துவத் தலைவர் போப் இருக்கிறார்; கிறிஸ்துவ மன்னர் இருக்கிறார். கிறிஸ்துவ முஸோலினி இருக்கிறார். இத்தாலி, மற்றொரு கிறிஸ்துவ ராஜ்யமாகிய அபிஸினியாவை வதைத்து வதைத்து வேட்டையாடி யாடி யன்றோ பிடித்திருக்கிறது? இதுவரை நடந்த யுத்தங்களுக்குள் இத்தாலி அபிஸினியாவில் நிகழ்த்திய யுத்தமே ஆகாகிய மானது என்று கூறலாம். இத்தாலி மூர்க்கமயமாயிருக்கிறது. இங்ஙனமாக, இத்தாலியில் கிறிஸ்துவராஜ்யம் எங்ஙனம் இருக்கும்?

கிறிஸ்து பெருமான் எதைப்போதித்தார்? எதைச்சாதித்தார்? அன்பை - சகோதர நேயத்தை - சமரசத்தையல்லவோ அவர் போதித்தார்? சாதித்தார்? கிறிஸ்துவின் ஜெப மொழியை நோக்குவோம். "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை ரக்ஷித்துக்கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்"— இந்த ஜெபம் நாடோறும் மேல்நாடு முழுவதுஞ் செய்யப்படுகிறது. ஆனால் அங்கே நாளுக்கு நாள் போர்க்கருவிகளும், போரிடுதலும், போர் முழக்கமும் பெருகிக் கொண்டே வருகின்றன. அங்கே கிறிஸ்துவ ராஜ்யம் எங்ஙனம் கால் கொள்ளும்? பயங்கர யுத்தராஜ்யம் கால் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை.

நீங்கள்
ஆஸ்ரின்
செவினை வாங்குவதே
புத்திசாலித்தனம் என்பதற்குரிய நியாயங்கள் வருமாறு:—



டி. லக்ஸ் சலூன் ரூபா 2,625/—

1 மிக மலிவாகப் பிரயாணம் செய்தற்கு உதவியாகின்றது
2 செலுத்துதற்கு எளிது; ஓரிடத்தில் நிறுத்தீவைப்பதற்கு எளிது
3 கொந்தளவில்லாதது; அதைச் செலுத்துதற்கு அதிக உந்திர அறிவு தேவையில்லை.
4 ஐந்தோ, ஆறோ அல்லது இன்னும் அதிகமான வருஷங்களுக்கோ ஆசைபின்றிப் பாவிக்கக்கூடியது
5 அதனினும் மும்மடங்கு அதிகமான கார்களிலுள்ள சாமான்கள் எல்லாம் உடையது.
6 இப்பொழுதுள்ள சலூன் கார்களுக்குள் மிகவும் பாரமில்லாத கார்—இதனால், ஓடும் செலவும் குறையும்.
7 சென்ற பன்னிரண்டு வருஷங்களாக, இதினும் பார்க்கச் கார் வந்தது கிடையாது.

சிறந்த 'டேபி

விலை ரூபா 2,150/-இலிருந்து

மற்றக் கார்களை நீங்கள் விலைகோடுத்து வாங்குகிறீர்கள். ஆனால் ஆஸ்ரின் காரில் செலவிடும் பணமோ பழுதற்ற பணமாகும்.

உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றட்
கொழும்பு.

யாழ்ப்பாணத்திற்கும்,
திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னார், அநுராதபுரம் ஆகிய இடங்களுக்கும் சோல் எஜெண்ட்ஸ்

வி. செல்வத்துரை & சன்ஸ்
அதிகாரம் பெற்ற ஏஜன்ஸ்
ஆஸ்பத்திரி ரோடு, யாழ்ப்பாணம்.

Y137. 19.8-35. — 18-8-36.

காமன்ஸ் சபையிற் கண்டனமாரி

திரு- லொயிட் ஜார்ஜ் மந்திரிகளுக்குக் கொடுத்த சவுக்கடி

"அதோ! இருக்கிறார்கள் கோழைகள்"

காமன்ஸ் சபையில் சிகழ்ந்த நிர்ப்பந்த ஒழிப்பு விவாதத்தின் போது பிரிட்டனின் மாஜிப் பிரதான மந்திரி திரு. லாயிட் ஜியார்ச் மந்திரிகளைக் கண்டனஞ்செய்து கிழ்க்கிய சொற்பொழிவின் முழு விபரங்களையும் நியூஸ் கிரானிக்கிள் பத்திரிகையில் திரு ஈ. கிளிபன் பால்ம் என்பவரிவருமாறு எழுதுகிறார்:—

முதன் முதலாக அயல்நாட்டு மந்திரி காப்டன் ஈடன் இத்தாலிக்கு விரோதமாகப் பிரயோகிக்கப்பட்டிப்பந்தங்களை நிறத்தியிட அரசாங்கத்தார் தீர்மானித்த திருப்பதாகத் தெரிவித்து அதற்குரிய காரணங்களையும் எடுத்துக்கூறினார்.

திரு. ஏ. கிரீன்வுட் என்னு தொழிற்கட்சிப் பிரதிநிதி எழுந்து பேசுகையில் திரு ஈடனின் பேச்சு ஒரு சர்வாதிகாரிக்குப் பயந்த அடிபணிவதாகும் என்றார்

நமது பொறுப்பு

பின்னர் திரு. லாயிட் ஜியார்ஜ் எழுந்து பேசியதாவது:—

திரு கிரீன்வுடின் தீவிரமான பிரசங்கத்துக்குப் பின் நான் அவர் கூறியதையே மீண்டும் கூற விரும்பவில்லை. அது அவசியமில்லை. ஆனால் இந்த விவாதம் எழுந்துள்ள இச்சந்தர்ப்பத்தில் நான் பேசவேண்டியது எனது பொறுப்பென்று எண்ணுகிறேன்.

நான் பிரதம மந்திரியென்ற நிலையிலும் பிரிட்டிஷ் பிரதிநிதிக் கோஷ்டியின் தலைவர்என்ற ஹோதாவிலும் சர்வதேச சங்கத்தில் பிரிட்டனை அக்காலத்தில் இணைத்து வைத்தேன். சர்வதேச சங்கத்தில் பிரிட்டன் இணைக்கப்பட்ட போது சங்க ஒப்பந்தம் நிபந்தனைகள் பொறுப்புக்கள் நிர்ப்பந்தங்கள் முதலிய சகல பொறுப்புகளுக்கும் நாம் பொறுப்பேற்றுக் கொண்டோம்.

நாம் இப்போது நடத்தி வருப்விவாதத்தைவிட முக்கியமான விவாதம் :வேறெதுவுமில்லை. அரசாங்கத்தாரின் கொள்கை நிறைவேறுமானால், அதாவது நாம் ஜெனிவாவுக்கு சென்றநாங்கள் தோல்வியடைந்தோம்! நாங்கள் இனிமேல் நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்க மாட்டோம்! நாங்கள் எங்கள் நிலைமையை முற்றிலும் மாற்றிக் கொண்டுவிட்டோம் என்று சொல்லுவோமானால் சர்வதேச சங்கத்தின் அதிகாரம் அற்றுப் போய் விட்டது என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. (காரகோஷம்)

அரசாங்கத்தின் கொள்கையை என்னென்று சொல்லுவது? சட்டத்தை மீறும் சில காவலிகள் ஒன்று சேர்ந்து துப்பாக்கியுடன் கலகம் செய்வார்களானால் அரசாங்கத்தார் எங்களால் முடியாது; நாங்கள் எங்கள் முயற்சியைக் கைவிடப் போகிறோம் என்று சொல்லுவார்களா? ஜெனிவாவில் பிரிட்டன் இவ்வாறு சொன்னால் சிறிய நாடுகளின் கதியென்ன?

வெறும் பேச்சு

நாங்கள் சர்வதேசசங்கத்தைச் சீர்திருத்தப் போகிறோம் என்ற அயல்நாட்டு மந்திரி கூறலதெல்லாம் பிரயோஜனமற்ற பேச்சே பொழிய வேறொன்றுமில்லை. சங்கத்தில் சீர்திருத்த வேண்டிய தொன்றுமில்லை. இப்போதுள்ள சர்வதேச சங்கத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒவ்வொரு நாடும் தன்னுடைய கொள்கையை அனுஷ்டிக்கலாம், நாம் ஒரு குறிப்பிட்ட காரியத்தை கடைசிவரை நிறைவேற்றியே தீர வேண்டும். நமக்குச் சிறிது அதிகாரம் மட்டும் இருக்தால் எல்லாநாடுகளும் சங்க ஒழுங்குகளின்படி நடந்துகொள்ளும்

எந்த நாடு சர்வதேச சங்க ஒப்பந்தப்படி நடந்துகொள்ள மறுக்கிறதோ? நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்க முடியாதென்று எந்நாடு கூறுகிறது? ஒருநாடுமில்லை. (ஒரு மந்திரி:- ஜெர்மனி) ஜெர்மனி சர்வதேசசங்கத்திற்குட்பட்டதல்ல (மந்திரிகள் சிரிப்பு)

சிறுபிள்ளைத்தனம்

இதென்ன! சிறுபிள்ளைத்தனமான சிரிப்பு? இந்தச்சிரிப்பின் பொருள் மூளையில் ஒன்றுமேயில்லையென்பதை ஆடம்பரமாகப் புலப்படுத்துகிறது. அயல்நாட்டுமந்திரி தமது பேச்சினிடையே, சர்வதேசசங்கத்திற்குக் கட்டுப்பட்டநாடுகள் என்று குறிப்பிட்டார். அவ்வாறு கட்டுப்பட்டிருக்கும் நாடுகளின் ஒற்றுமையைக் குலைப்பதற்கு அவர் ஜெனிவா செல்லப்போகிறாரா? (காரகோஷம்)

சர்வதேசசங்கத்தைத் தகர்க்கவே அயல்நாட்டுமந்திரி ஜெனிவாவுக்குப் போகிறார் (காரகோஷம்) அந்தத் தப்பு வேலையை அவர் வேறாரிடமாவது ஒப்புவித்தால் நல்லது. சர்வதேசசங்கத்தின் வீரர் என்று அவரை எல்லோரும் கொண்டாடினார், வெகு அழகு!

இவருக்கு முக்கிய அயல்நாட்டு மந்திரி தமது ஜாபம் பலிக்காமற் போகவே ராஜினாமாச் செய்து விட்டார். அந்தமட்டில் அவர் கௌரவமாக நடந்துகொண்டார். ஆனால் இவரோ-----! இவருக்கு முதியவர் ராஜினாமாச் செய்த போது தம்மை மறுபடியும் மந்திரி சபையினர் அழைப்பார்கள் என்று அவருக்கு என்கு தெரியும் அவருக்கு நேர்ந்ததொற்றுவியாதிக்காக அவர் குவாரன்டைனுக்கு அனுப்பப்பட்டார். வியாதி குணமாகிசுத்தமானதும் திரும்பவும் வரவேண்டியதுதானே! (காரகோஷம்)

நம்பிக்கைத் துரோகம்

ஆனால் நமது அயல்நாட்டுமந்திரியோ, (திரு. ஈடனைச் சுட்டிக்காட்டி) நமக்கு நம்பியவர்களுக்கு முன்னிலையில் ஜெனிவாவுக்குச் சென்று சர்வதேசசங்கத்தைத் தகர்க்கப்போகிறார்! பாவம்! ஒரு சர்வாதிகாரி அசிரயமாக ஆக்கிரமித்தார்! நாம் அறைகூவினோம்! இப்போது நிலைமை எவ்வாறு மாறிவிட்டது! 50 தேசங்கள்சேர்ந்து ஐயையோ! அவனை அடிபணியச் செய்ய எங்களால் முடியவில்லையே என்று கூடி அழுகின்றன.

என்ன பரிதாபம். இச்சபையில் நானும் கடந்த 50 வருஷ காலமாகிருந்திருக்கிறேன். இப்படிப்பட்ட நிலைமை இதற்குமுன் ஒரு முறையாவது ஏற்பட்டதாக என நினைவுக்கு வரவில்லை.

பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பிரதம மந்திரிக்கு அடுத்த ஸ்தானம் வகிக்கும் ஒருவர் இந்தக் காமன்ஸ்சபைக்குவந்து பிரிட்டன் தோல்வியுற்றது! பிரிட்டனும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் தோல்வியுற்றது! நாம் எடுத்த காரியத்தைக் கைவிடவேண்டியதுதான்! என்று கூறியதை நான் இதற்குமுன் எக்காலத்திலும் கேள்விபட்டதில்லை. இவர் கூற்று எனக்கு விளங்கவில்லை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு இதைவிட மகத்தான கெருக்கடி ஏற்படவில்லையா? நாலரை வருஷங்களாக பிரிட்டன் போர்செய்து வெற்றி பெறவில்லையா? அப்பேர்க்கொத்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதியொருவர் இங்குவந்து எல்லாம் பேய்விட்டது என்று சொல்வதின் அர்த்தமென்ன? இந்தஆறுமாதத்தில் என்ன நடைபெற்றுவிட்டது? எதற்கே உயிர்கள் சேதமாகிவிட்டன? ஒன்றுமில்லையே! ஏதோ வியாபாரத்தில் 70 லக்ஷம் நஷ்டமாகிவிட்டதாம்! தோல்வியாம்! நம்மால் முடியாதாம்! என்ன விநித்திரம் பாருங்கள்!

யுத்தப் பூச்சாண்டி

என்ன கேவலமான நிலைமை! இத்தகைய நெருக்கடி இனியாவது இந்த ஏகாதிபத்தியத்துக்கு ஏற்படாமலிருக்கும்படி இறைவன் அருள புரிவாரென்று எண்ணுகிறேன். (காரகோஷம்)

எழுபது லெக்ஷம் நஷ்டமாய்ப் போய்விட்டதாம்! சடக்க மகாயுத்தத்தின்போது தினமொன்றுக்குச் செலவான கொகையில் மூன்றில் இரண்டு பங்குகூட இல்லை. கடந்த யுத்தம் எதற்காக நடந்தது? சர்வதேச உரிமையைப் பாதுகாக்க நடந்தது! சிறியநாடுகளுக்கு இழைக்கப்பட்ட தீங்குகளை ஒழிக்க நடந்தது!

"யுத்தம் வந்துவிடும்!" என்று பூச்சாண்டி காட்டுகிறார் நமது அயல்நாட்டு மந்திரி! நாம் நிர்ப்பந்தங்களை ஆரம்பித்தபோது இருந்த யுத்த பயத்தைவிட இப்போது யுத்தபயம் மிகுந்துவரா ருக்கிறது. அதிற் சந்தேகமில்லை.

இன்னுமோர் விஷயம் நாம் நிர்ப்பந்தங்களை ஆரம்பித்தபோது, நமது கடற்படை யுத்தத்துக்கு ஆயத்தமாயிலை யென்றும், தளவாடங்கள் போதாவென்றும், கூறப்பட்டது. இந்த அரசாங்கத்தின் தேசாபிமானத்தை என்னென்று சொல்வது?

பிரஞ்சு ஆதரவு

புதிய பிரஞ்சு அரசாங்கத்தார், பிரிட்டன் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கும் ஒவ்வொரு நடவடிக்கையுமாகிய நமது அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கிறார்கள் ஒன்று ஓர் வதந்தி உலாவுகிறது. அது உண்மைதானா? திரு ஈடன் நிர்ப்பந்தங்கள் விஷயமாகப் பிரஞ்சு சர்க்காரின் அபிப்பிராயத்தையறிய நான் பலமுறை முயற்சித்திருக்கிறேன். அவர்கள்தங்கள் சொந்த ஹோதாவில் நிர்ப்பந்தங்களை நிறத்த ஆரம்பிக்க முடியாதென்றும். ஆனால் பிரிட்டனுடன் ஒத்துழைக்கத் தயார் என்றும் கூறினார்கள். அவர்கள் நிர்ப்பந்தங்களை இன்னும் பிரயோகிப்பதை சம்மதமாகவோ, புதிய நிர்ப்பந்தங்களை ஆரம்பிப்பது விஷயமாகவோ பிரஞ்சு அரசாங்கத்தார் எவ்விதமுறுதிமொழியும் கூறவில்லை. (மந்திரிகள் காரகோஷம்)

திரு லொயிட் ஜியார்ஜ்:—பிரஞ்சு அரசாங்கத்தார் நம்மை ஆதரிக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள் என்று நான் கூறியதிற் பிழையில்லை. இத்தாலி நீங்கலாக மத்தியதரைக் கடல் நாடுகள் நம்மை ஆதரிக்க ஆயத்தமாயிருக்கின்றன. அப்படியிருக்க நாம் அஞ்சி ஓடுவரல்லனா?

அரசாங்கத்தார் ஓர் மகத்தான பிழை செய்து விட்டனர். அவர்கள் நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்கவேண்டிய விதமாகப்பிரயோகித்திருந்தால் நாம் இப்போது ஓடவேண்டியிராது. எவ்வளவோ கௌரவமான சமாதானம் ஏற்பட்டிருக்கும்.

சுதந்திரத் தீவர்த்தி

சில காலத்திற்கு முன் 'சுதந்திரத் தீவர்த்தி' என்ற பெயருள்ள புத்தகமொன்று என்பார்வைக்கு வந்தது. அதில் பிரதம மந்திரியின் பிரசங்கங்கள் அடங்கியிருந்தன. புத்தகம் அழகாகத்தானிருந்தது. புத்தகத்தின் மேல் மட்டையில் பிரதம மந்திரியின் படமொன்றும் காணப்பட்டது. சுதந்திரத் தீவர்த்தியின் ஒளி பிரதம மந்திரியின் முகத்தில் பிரதிபிம்பித்தது போல் அப்படம் சித்திரிக்கப்பட்டிருந்தது.

அபிஸீனியாவைப் பற்றிப் பிரதம மந்திரி நிகழ்த்திய ஒரு சொற்பொழிவை நான் வாசித்தபோது அதில் 'இத் தேசம் ஒரு பாறைபோல அசையாமல் நிற்கும்' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஐயோபாவம்! இப்போது இத்தேசம் ஒரு மிதப்பாக்கட்டை போல் அலையில் ததத்தளிக்கிறதே! மற்றோரிடத்தில் 'உங்கள் கால்கள் உறுதியாக இருக்கட்டும்' என்று பிரதம மந்திரி தெரிவித்திருக்கிறார். ஆனால் இப்போது அதே கால்கள் ஓட்டமெடுக் கின்றனவே! இந்தப் பிரசங்கம் தேர்தல் சமயத்தில் நிகழ்த்தப் பட்டது. 50 நாடுகள் நம்மை ஆதரித்ததாகவும் தெரிவிக்கப் பட்டது பிரதம மந்திரி சுதந்தரத் தீவர்த்தியைக்கையிலேந்தி நின்றார். ஐயோ! சில வாரங்கள் காலும் கழியவில்லை தீவர்த்தியை ஒளித்து வைத்து விட்டார்கள்.

இன்றிரவு அத்தீவர்த்தி சுறசுறவென்ற சப்தத்துடன் நீர் ஊற்றி அணைக்கப்பட்டு விட்டது.

இச் சப்தம் உலக முழுவதும் எதிரொலி செய்யும்.

இன்றிரவு நாம் கோழைத்தனமாகச் சரணாகதியடைந்தோம்! (மந்திரிகளைச் சுட்டிக் காட்டி) அதோ இருக்கிறார்கள் கோழைகள்!

சைக்கிளைப் பறித்த எதிரி

வழக்குத் தவணையிடப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் கோர்ட்டில் உருப்பாயில் வசிக்கும் பாமேஸ்வரக் கொலீஜ்ஜிற் படிக்கும் மாணவன் சட்டநாதன் - இராசதுரை என்பவருடைய 75ரூபா பெறுமதியான 'ரலி' பைசிக்கிளை கொக்குவிலில் வசிக்கும் வயித்தியலிங்கம்-இரத்தினம் என்பவர் பலாத்காரமாகப் பறித்ததாகவும் நீதியீனமாகப் பேசியதாகவும் குற்றஞ்சாட்டிய வழக்குத் தொடரப்பட்டது.

சட்டநாதர் இராசதுரை கூறியதாவது:—

நான் பாடசாலைக்குச் சயிக்கிளில் தான் சென்வேன். சென்ற 14-ம் திகதி நானும் செல்வரத்தினமுமாகப் பாடசாலையிலிருந்து விட்டுக்குச் சென்றோம், திருநெல்வேலிச் சந்தியடியில் எதிரி என்னை நிற்கச் சொன்னார். நான் நின்றேன். எனது சயிக்கிளைத் தரும்படி கேட்டார். நான் கொடுக்கமறுத்தேன். எதிரி என்னைக் கழுத்திற் பிடித்துத்தள்ளிச் சயிக்கிளையும் பறித்து வாயில் வந்தபடி வைதார். இதன் பின், எதிரி சயிகிளில்ஏறியாழ்ப்பாணப்பக்கமாக ஓடினார். அப்போது சந்தியில் வேலாயுதமும் இராசரத்தினமும் நின்றார்கள். நான் இதை அவர்களுக்குச் சொன்னேன் அவர்கள் என்னைப் பிறின்சிப்பலிடம் அறிவிக்கும்படி கூறினார்கள். அன்று பாடசாலை முடிந்தமையால் பிறின்சிப்பலிடம் மறுநாட்காலை அறிவித்தேன் பொலிஸ் சுப்பிரின்டென்டனும் ஒரு கடிதம் தந்தார். நான் அதைச் சுப்பிரின்டென்டனிடம்கொடுத்தேன். எதிரியையும் சயிக்கிளையும் பொலிசார் பிடித்தனர்.

இராசரெத்தினமும் சினிவாசகமும் சாட்சியம் கூறியபின் எதிரி 150 ரூபா பிணையில் விடப்பட்டார், வழக்கு ஆவணி மீ 4-ம் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

வண்ணைநகர்

தையல் நாயகி

கலிவெண்பா

திருவூஞ்சல்

முத்துக்குமாரசுவாமி

திருவூஞ்சல்

இவை இப்பொழுது தெளிவாக அச்சிடப்பெற்று ஒரே பிரதியாக வெளிவந்துள்ளன.

விலை சதம் 5

மானேஜர்,

சைவப்பிரகாசயந்திரசாலை,

வண்ணார்பண்ணை.

அபின் வைத்திருந்தோருக்கு அபராதம்.

எதிரி றெயிற்பெட்டியில் அகப்பட்டார்

யாழ்ப்பாணம் பொலிஸ் உதவி நீதிபதி திரு. சி. பி. டி. சில்வா முன்பாக மதுப்பரிசோதகர் திரு. வி. ஜி. டப்ளியு போசேப் என்பவர் அந்தவேலியில் வசிக்கும் கோவிந்தர் கதிரித்தம்பி என்பவரை ஆண்டு இறந்தல் அபின ஓர் தோற்பெட்டியில் வைத்துக்கொண்டு றெயிலில் கொழும்புக்குப் பிரயாணம் செய்யும் போது இப்பரிசோதகர் முன் அறிவித்தலைக்கொண்டு கண்டுபிடித்து அவர் மீது பொலிஸ் கோர்ட்டில் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மதுப்பரிசோதகர் வி. ஜி. டப்ளியு. போசேப் கூறியதாவது:—

சென்ற மார்கழி மீ 12ந் திகதி யாழ்ப்பாணமிருந்து கொழும்புக்குச் செல்லும் புகை வண்டியில் ஒருவர் அபின் கொண்டு வருவதாகத் தகவல் கிடைத்தது. நான் எனது 305ம் இலக்கக்கார்ட்டோடு ஆணியறையில் அந்த றெயிற்பெட்டியிலுள்ளவர்களைச் சோதித்துக்கொண்டு சென்றேன். நான்இப்படிச் சோதித்துக் கொண்டு போகையில் மதுப்பரிசோதகர் திரு. D. நதானியலும் அந்து நிற்பதைக் கண்டேன். 3ம் வதுப்புப் பெட்டி ஒன்றைச் சோதித்தபோது எதிரியைக் கண்டேன். இவருக்கருகில் ஓர் தோற்பெட்டி காணப்பட்டது. அதை எடுத்து யாருடையதென வினவித் திறக்கச்சொன்னேன். அவர் தன்னிடத் திறப்பு இல்லை என்று கூறினார். அவரை நான் சோதனை செய்தபோது அவருடைய மடியிலிருந்து ஓர் சிகறெற் கேசுக்குள் திறப்புக் காணப்பட்டது. அத்திறப்பாற் பெட்டியைத் திறந்தேன். அதற்குள் ஓர் தலையணை உறைக்குக் கீழ் இரண்டு பார்சல் (ஒவ்வொன்றும் ஒவ்வொரு ருத்தல்) அபின் இருக்கக் கண்டேன். உடனேயே மாப்குளத்திற் பெட்டிக்குச் சீல் வைத்தேன். எதிரியை மதவாச்சி ஸ்டேசன் மாஸ்டரிடம் ஒப்புவித்தேன். திரும்ப அழைத்துவந்து வழக்குத் தொடர்ந்தேன்.

இதன்பின் திரு. D. நதானியல் சாக்ஷியம் கூறினார். அதன்பின் எதிரியாகிய கோவிந்தர் கதிரித்தம்பி கூறியதாவது:— நான் சென்ற மார்கழி மீ 12ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு றெயிலில் பிரயாணம் செய்தேன். அப்போது நான் மதுப்பரிசோதகரிடமுடுப்புடன் ஒருவரையும் காணவில்லை- ஆணியறையில் ஒருவர் வெள்ளைக்காற்சட்டையுடன் நான் இருந்த பெட்டியில் ஏறினார். அவருடன் இன்னுமொருவர் அங்கு வந்தார். அவர்கள் எனக்கு அருகில் வந்து எனது தோற்பெட்டியை எடுத்து யாருடையதெனக் கேட்டார்கள். என்னுடையதென்று நான் சொன்னேன். அவர்கள் என்னிடம் திறப்பைக் கேட்டார்கள். நான் கொடுத்தேன். அவர்கள் பெட்டியை அப்புறம் கொண்டு சென்றார்கள். நான் திறப்பைப் பறித்தேன். எனது பெட்டிக்குள் 850 நுபாவும் எனது சீலையுமிருந்தன. திறப்பைப் பெறுதற்காக முயன்றேன். இதற்கிடையில் இன்னுமொருவர் வந்து சேர்ந்தார். மதவாச்சியில் அவர்கள் பெட்டியை ஸ்டேசன் மாஸ்டரிடம் ஒப்புக்கொடுத்தனர். அவர் வாங்க மறுத்தார். திரும்ப அவர்கள் என்னை ஆணியறைக்குக் கொண்டு வந்தார்கள். அங்கே திரு. பிறைதுடி நின்றார். அவர்கள் நான் சொன்னதாக ஓர் வாக்குமூலம் எழுதினர்.

நான் கொழும்புக்கு ஓர் கார் வாங்கச் சென்றேன். எனக்குப் பீறைதுடியைத் தெரியும். முன் ஒரு முறை இவர்களுக்குக் களவு சாமான் (அபின் அல்லது கஞ்சா) பிடிப்பதற்கு உதவி புரிந்தேன். அச்சுவேலியிலுள்ள நாகமணி என்னுடன் திருப்பதியில்லை. நான் அபின் வைத்திருக்கவில்லை. அவர்கள் எனது முன்னிலையிற் பெட்டியைத் திறக்கவுமில்லை. சீல் செய்யவுமில்லை.

நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு எதிரிக்கு 4 மாதமறியவும் 250ரூபா அபராதமும் விதித்தார். இவ் 250 நுபாவைக் கட்டத்தவறினால் 6 வாரம் மறியவும் விதிக்கப்படும் எனக் கூறப்பட்டது. இத்தோகையில் பாதி 125ரூபா பொலிஸார் வெகுமதிக்குச் சேரவேண்டியது என்றும் தெரிவிக்கப்பட்டது.

விளம்பரம்

நல்லூர்க் கந்தசாமி கோயில்
மகோற்சவம்

1936ம் ஆண்டு ஜூலையர் மாதம் 23ந் திகதி தொடக்கம் ஆக்கஸ்ட் மாதம் 18ந் திகதி முடிய

மேலே குறிக்கப்பட்ட காலவெல்லையுள் நல்லூர்க் கந்தசாமி கோயில் மகோற்சவம் நடைபெறுமாதலால், மேற்படி கோயில் வீதிகளாகிய யாழ்ப்பாணம் — பருத்தித்துறைப்பாகம்; பழையசங்கைத் தெருவின் பாகங்களால் வழக்கம்போல் திருவிழா காவடி முதலியன செல்ல விடப்பட்டிருக்கின்றன. இத்திருவிழாக்களும் காவடி முதலியனவும் மேற்படி வீதிகளால் வலம் வரும்போது எவ்வகையான வண்டிகளும் குறிப்பாக தெரு வீதிகளால் செல்வதை ஒழித்து, உலைமடைத் தெரு நாவாந்துறைத் தெரு என்னும் இவைகள் மார்க்கமாகவே போக்குவரவு செய்யவேண்டுமென இதனால் எவருக்கும் பிரசித்தஞ் செய்யப்படுகின்றது.

V. T. டிக்மன்
வடமாகாண உப பொலிஸ் தலைவர்
பொலிஸ்தானம்

யாழ்ப்பாணம்
17-7-36
(G 32. 20 & 23-7-36)



வாழ்க அத்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க நீயதெல் லாம் அர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஸ்ரீ
ஆடிமீ ருஉ திங்கட்கிழமை

அரச - சக்கரவர்த்திமீது கொலைப்பிரயத்தனம்.

நமது அரசசக்கரவர்த்திக்கு உயிர்ச்சேதத்தையோ இல்லையேல் அபாயத்தையோ ஒரு உன்மத்தன் விளைக்க முயன்ற பயங்கரமான வரலாறு இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்து வெளியிடப்பெறுள்ளது. இப்படியான துரோணமும் துர்ச்செயலும் விக்ரோறியசக்கரவர்த்தனியின் காலந் தொடக்கம் இதுவரை இல்லையெனலாகும். உலகத்திலேயுள்ள அரசர்களெல்லாரிலும் ஆங்கில அரசர்களே தம் பிரசைகளாலும் பாராளுமன்றப் முதலாம் அரசியற் சங்கத்தினாலும் பிறராலும் மதிப்போடும் விசுவாசத்தோடும் நடத்தப்படுபவரென்று சொல்லுதல் மிகையாகாது. அப்படியிருக்க, காத்திராப்பிரகாரம் இச்சம்பவம் நேர்ந்தமை எவர்க்கும் ஆச்சரியத்தையும் ஆச்சரியத்தையும் ஏக்கத்தையும் விளைக்கலாயிற்று. நமது அரச சக்கரவர்த்தியெனிலோ வாழையடி வாழையாக, நமது முதாதைகளும் முதாட்டியருமாகிய அரசர்கள் அரசிகளின் முறையினின்றுந் திறம்பாது எவ்விஷயத்திலும் அவர்களையே பின்பற்றி வருகின்றார். பின்பற்ற வேண்டுமென்ற இன்னமும் முயற்சி செய்கின்றார். முசோலினி ஹிட்லர் முதலியவர்கள் 'நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்' என்ற பிரகாரம், எந்தகேரமும் தங்களுக்கு ஆபத்து வருமென்ற சந்தேகத்துடன் காலங் கழிக்கவேண்டியவர்கள்; ஆனால் நமது அரசசக்கரவர்த்தியெனிலோ அப்படியான நிலைமையினை ஸ்ளளா ரல்லர். இவர் 'அஞ்சாட் புறங்கிடக்கும் நீர்ப்பரம்பு' என்ற இயல்புடையராய் எவ்வகையான சந்தேகம் அச்சம் பாதுகாப்பு என்பன இல்லாமல் யதேச்சையாகச் சனங்களுடன் ஊடாடுபவர்; இப்படிப்பட்ட இவருக்கும் கோடரிக்காம்புபோன்ற ஒரு ஆங்கில துஷ்டனே தீமைசெய்யமுயன்றானென்றால் இனி ஆரை நம்புவது என்ற சந்தேகம் ஏற்படுகின்றதல்லவா?

இனி, நமது அரச சக்கரவர்த்தியெனிலோ தம்முடைய ஆருயிருக்கு அபாயம் வந்துவிட்டதெனக் கண்டசமையத்திலும் மகா ஞானியைப் போல, அதனால் எவ்வகையான பதஷ்டம் தீகில் சீற்றம் மாறுபாடு முதலியன இன்றி மன ஆறுதலுடன் சென்றாராம்; காரண மென்னா? தாம் பிறருக்குத் தீமை நினையாதபோது தமக்குப் பிறர் ஒருபோதும் தீமை நினைக்கமாட்டார்கள்; அப்படி நினைத்தாலும் அதனாற் றமக்குக் கேடு வரமாட்டாதென்ற முழு நம்பிக்கைதான். அதனாற்றான் உண்மையில் அவருக்கு யாதும் அபாயம் நேரவில்லை; இனிமேல் நேரப்போவதுமில்லை; அரச சக்கரவர்த்திமீது கொலைப் பிரயத்தனஞ் செய்யப்பட்டதைக் கண்டநேரந் தொடக்கமாக, அந்தப் பயங்கரமான செய்தியைக் கேட்ட நேரந் தொடக்கமாக அரசர் பிரானுடைய சக்கராதிபத்தியத்தில் வாழும் பிரசைகள் கொண்டுள்ள ஏக்கமும் கவலையும், அவருக்கு யாதும் அபாயம் நிகழவில்லையேயென்பதையிட்டு உண்டான ஆநந்தமும், கொலைசெய்யமுயன்றான்மீது கொண்டுள்ள ஆத்திரமும், இன்ன பிறவும் எங்கள் மன்னர்பிரானிடத்து அவருடைய பிரசைகள் கொண்டுள்ள விசுவாசத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதிற் காட்டுகின்றதல்லவா?

எங்ஙனமாயினும், இந்த அசம்பாவிதம் நடந்தமைக்கு ஒரு காரணம் வேண்டும். இக்காலத்திலே மேலைத் தேச இராச்சியங்களெல்லாம் தெய்வத்தை மறந்து நீதியை விடுத்து இரக்கத்தைத் தவிர்த்து நாகரீகத்தை ஒழித்து, பேராசை யுத்தவெறி மிருகவிருப்பம் முதலிய தமகுணமெனுங் இத்தீய குணங்களோடுஞ் செயல்களோடுங் கூடியவைகளாகக் காணப்படலாயின. சர்வாதிகாரிகள அயிரோப்பாக் கண்டத்திலே முளைத்தபின்பு கொலையும இராசத்துரோகமும் அயல் இராச்சியங்கட்கு இடைஞ்சலும் அதிகப்படலாயின. அபிளீனிய சக்கரவர்த்திக்கு அயிரோப்பிய தத்துவராச்சியங்கள் உட்பகையாகவும் புறப்பகையாகவுஞ் செய்த துரோசம் தெய்வத்திற்கும் மனச்சாட்சிக்கும் நீதிக்கும் மாறுதலல்லவா? அந்த அயிரோப்பிய சக்கரவர்த்தி பிருத்தானியரை விசேஷமாக நம்பி இங்கிலாந்திற்குச் சென்று, தாம் அங்கும் கைவிடப்பட்டமைகண்டு பெரிதும் கலங்கிவிட்டார். ஏழை அழுத கண்ணீர் கூறிய வாளோக்குமென்பது பழமொழி. பிரசைகள் செய்யும் பாவம் அரசனை அடையுமென்பது ஸ்மிர்திகளிற் சொல்லப்பட்டது. பிரசைகளும் பிருத்தானிய இராசதந்திரிகளும் செய்த தவறுகள் துரோகம் காரணமாக இந்தப் பிழை நேரிட்டது; ஆனால் எங்கள் மன்னர்பிரானும் அவருடைய முதாதையரும் செய்துள்ள நன்மையின் பயனாக இப்பிழை யாதும் சோதத்தை விளைத்துவிடாதென்று ஆங்கில அரசரும் அவதானமாக நடந்துகொள்ளவேண்டு மென்பதைமாத்திரங் காட்டிவிட்டு மறைந்தது.

அழிவுக்குமுன் அகந்தை

அழிவுக்குமுன் அகந்தை ஏற்படும் என்பது பழமொழி. இத்தாலியின் செயலை நினைக்கும்போது இப் பழமொழி ஞாபகத்திற்கு வருகின்றது. இத்தாலியின்மீது சர்வதேச சங்கம் கையாண்ட நிர்ப்பந்தங்கள் இறக்கொழிக்த. எனினும், இத்தாலிமீது மற்ற நாடுகளுக்குள்ள வெறுப்பு மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டேவருகின்றது. தன்மீது நிர்ப்பந்தங்களைக் கையாண்ட நாடுகளைத் தலை குனியச் செய்துவிட்டோம் என முஸோலினியும் இத்தாலியரும் அளவுக்கு மீஞ்சி அகந்தை கொள்கின்றனர். ஆயின், அகந்தை வரும்போது அழிவும் அதனைத் தொடரும் என்பதை இத்தாலியர் உணராமை இரங்கத்தக்கதாகும். பிரிட்டனும் பிரான்சும் நிர்ப்பந்தங்களை விட்டுக்கொடுத்தும் வேறு சாத்தமான முறைகளைக் கையாடியும் வந்தமைக்குக் காரணம் இல்லாமலில்லை. இத்தாலியின் கட்டளைப் பெற்று, லோகார்னோ உடன்படிக்கையையும் டார்டனல்ஸ் மகாநாட்டு கோக்கங்களையும் தமக்கேற்றவாறு நிறைவேற்றிக் கொள்ளலாம் என பிரிட்டனும் பிரான்சும எதிர்பார்த்தன. ஆயின், இத்தாலி அதற்கு இடங் கொடுப்பதாகத் தெரியவில்லை. யுத்தவெறியினாலும அபிளீனியாவை வென்ற அற்ப வெற்றியினாலும் இத்தாலியர்க்குப் புத்தி மயங்கியிருக்கிறது. அவர்கள் அகந்தையினாற் பட்டவர்களாய்க் காணப்படுகின்றனர். ஆகவே, பிரிட்டனும் பிரான்சும் இப்போது இத்தாலியின் மமதையை அடக்குவதற்குத் தமமாலானவரை ஆயத்தங்களைச் செய்துவருகின்றன. இவ்வாயத்தங்களில் மத்தியதரைக் கடலிலுள்ள கடற்படையைப் பலப்படுத்துதல் முக்கியமானதாகும். மத்திய தரைக்கடலின் மேற்குப் பக்கத்தில் பிரிட்டனது கடற்படைகளும் பிரான்சினது கடற்படைகளும் ஒருங்கு சேர்க்து நிற்கும். ஆகவே, மேல மத்தியதரைக் கடலில் அவ இரு நாடுகளினது படைகளையும் எந்த நாட்டினராலும் அசைக்க முடியாது. ஆயின், கிழமத்தியதரைக் கடலிலேயே இத்தாலியப் படைகள நிற்கின்றன. இவ்இத்தாலிய கடற்படைகளால் தமக்கு எவ்வித தீங்கும் நேரிடாமல் காத்துக் கொள்வதற்காக பிரிட்டன் துருக்கியின் உதவியைக் கோரி நிற்கின்றது. துருக்கியும் இத்தாலியப் படைகள் பலமடைந்து வருவதைக் கண்டு அஞ்சுகின்றது. ஆகவே, தற்பாதுகாப்பிற்காக, அதுவும் பிரிட்டனோடு ஒத்துழைக்க ஆயத்தமாக இருக்கின்றது. ஸாஸேன் உடன்படிக்கையினபடி, துருக்கியின் கடற்படைகளுக்கு அதிக சுதந்திரமில்லாமற்போய்விட்டது. அதனால், துருக்கியின் கடற் படைகளுக்கு எவ்வளவுதூரஞ் சுதந்திர மளிக்கப்படலா மென்பதைப்பற்றி ஆலோசித்துத் தீர்மானிப்பதற்காகவே தற்போது டார்டனல்ஸ் மகாநாடு நடைபெறுகின்றது. பழைய உடன்படிக்கையினபடி, டார்டனல்ஸ் ஜலசந்தியிற் பிறநாட்டு யுத்தக் கப்பல்கள் பிரவேசிக்கக் கூடாது. இவ்வுடன்படிக்கையில், எவ்வித மாற்றமேனும் செய்யப்படுமேல், கருங்கடலிலுள்ள தனது படைகளையும் அவ்வழியாகச் செல்வதற்கு இடமளிக்க வேண்டுமெனபது உருஷியாவின் கோரிக்கையாகும். உருஷியாவின் வேண்டுகோள் அளிக்கப்படுமாயின், உருஷியப் படைகள பிரான்சியப் படைகளுக்கு உதவி புரியும். இவ்வாறு உருஷியப் படைகளும் பிரான்சியப் படைகளும் ஒன்று சேருமாயின், பேலடிக் சமுத்திரத்திலுள்ள ஜெர்மன் படைகளுக்குத் தீங்கு நேரிதுகூடும், அதனை நியாயமாகக் கொண்டு ஜெர்மனி, பிரிட்டன்-ஜெர்மனிக் கடற்படை ஒப்பந்தத்தை மீறித் தனது கடற்படைகளை இன்னும் அதிகரிக்குமாறு செய்யமுயலுதல்கூடும். இக்கிலைமை ஏற்படுவது பிரிட்டனுக்கு விருப்பமில்லை. இதனால், டார்டனல்ஸ் மகாநாட்டில், விஷயங்கள் செவ்வனே கடந்தேறுவதற்குப் பெரிய தொரு தடை ஏற்பட்டிருந்தது. நல்லவேளையாகச் சமாதானமாகப் போகக்கூடிய ஒரு திருத்தத்தை உருஷியா கொண்டுவரலாயிற்று. இத்திருத்தத்தின்படி, யுத்தகாலங்களில், சர்வதேச சங்கத்திற்கு மாறாக உள்ள நாடுகளின் கப்பற படைகள் மாத்திரம அவ்வழியாகச் செல்லுதல்கூடாதென்று நிர்மாணிக்கப்பட்டது. இதனால், இத்தாலி ஒரு தேசம் மாத்திரமே பாதிக்கப்படும். ஜெர்மனி இத்தாலிக்கு உதவிசெய்ய விருப்பமினாலும், தரைப்படை மூலமாகச் செய்யுமேயன்றி, கடற்படை மூலமாகச் செய்ய முடியாது. ஏனெனில், தனது சொந்த நாட்டைக் காப்பாற்றுவதற்கு இன்றியமையாத போலிடிக் சமுத்திரத்திலுள்ள தனது படைகளை இத்தாலிக்கு உதவிசெய்வதற்காக, மத்தியதரைக் கடலுக்குக் கொண்டுவருதற்கு அதனால் முடியாது. அவ்வாறு செய்ய முயலுமாயின், உருஷியா, பிரிட்டன், பிரான்ஸ் என்னும் மூன்றுநாடுகளும் ஒருங்கு சேர்ந்து அப் படைகளை நாசமாக்கிவிடமுடியும். பிரிட்டனுக்கோ, வடகிழக்கில் உருஷியாவின் கருங்கடற் படைகளின் உதவி உண்டு. கிழக்கே துருக்கியின் துணை உண்டு. இதுவேயுமன்றி, மேல்டா நீரின்படை நிலையத்தையும், எகிப்தின் உதவி கொண்டு, அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தையும் அது பலப்படுத்தி வருகின்றது. இவ்வாறே பிரிட்டனது மத்திய தரைப்படை அமைக்கப் பெற்று வருகின்றது. இக் கிலைமையில், இத்தாலி அகங்கார மேலிட்டினால், கொக்கரிப்பது அதற்கே அழிவைத்தரும் என்பது கூறவேண்டியதில்லை. எவ்விதமோ அபிளீனியா என்னும் சிற்றரசை வெற்றிபெற்றபோதிலும், வல்லரசுகளோடும் அது முட்டிப் பொருதிக் கொள்ளுமாயின், அது நாசமாகப் போதல் நிச்சயம். அதன் கொக்கரிப்பை அடக்குதற்கான முயற்சினை வல்லரசுகள் அமைதியாகச் செய்துவருகின்றன. இதனை அறிந்து இத்தாலி புத்தியாகப் பொறுமையாக இருந்தாலன்றி அதற்கு நாசகாலம் மிக அண்மையில் ஏற்படும்என்றே கூறவேண்டும்.

மாவிட்டபுரக் கொலைவழக்கு

சுப்பிறீம்கோட்டில் விசாரணை

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் மாவிட்டபுரத்தில் வசிக்கும் (1) செல்லையா - பஞ்சாட்சரம் (2) பொன்னையா - நாகலிங்கம் ஆகியவர்கள் அல்லூர் இளையதம்பி - இராசையா என்பவரைக் கல்லாலும் பொல்லாலும் அடித்துக்கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டியவழக்கு நீதியரசர் F. T. சூட்ஸ் முன்பாக விசாரனைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளிக்காக திரு. A. H. R. வீரசூரியாவும் எதிரி சார்பாக S. D. தம்புத்துரைசாமியும் திரு. R. கனகுத்துரையும் வாதித்தார்கள்.

முடிக்குரிய நியாயவாதி திரு. A. H. R. வீரசூரியா கூறியதாவது:—

பொலிஸ்கோட்டில் சாட்சியம் கூறியதிலிருந்து இறந்த இராசையாவும் வயிந்தலிங்கமும் முத்துப்பிள்ளையுடன் இருந்ததாகத்தெரிகிறது. (சவித்தது) கந்தையா என்பவர் அடுத்தவளவில் வசித்தார். இந்தவழக்கில் பொலிஸ்கோட்டில் ஐந்து எதிரிகள் இருந்தனர். இங்கே இரண்டு எதிரிதான் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார்கள். சேன்ற மார்கழி மீ 7ம் திகதி இறந்த இராசையாவின் மனைவியார் குளிக்கிறதற்குக் கிணற்றடிக்குச் சென்றாள். இக்கிணறு கந்தையாவுக்கும் பங்கு கந்தையாவும் அக்கிணறண்டை சென்றார் உடனே அவள் கந்தையாவை அங்கு கண்டதும் விரைவாகக்குளித்து அப்புறம் சென்றாள். செல்லும்போழுது சவுக்காரக்கட்டியின் நினைவு அவளுக்குவந்தது. அச்சவுக்காரக்கட்டியைத் தேடி எடுப்பதற்கு நாகேந்திராமும் வயிந்திலிங்கமும் அனுப்பப்பட்டனர். அவர்கள்தேடிக்காணவில்லை என்று அறிவித்தபோது இறந்தவர் இதை அறிந்தும் கந்தையாதான் எடுத்திருக்கவேணும் என்று சொன்னார்.

8-ம் திகதி இறந்த இராசையாவும் டிறைவர் குணவாதனுவுமாகக் கீரிமலைக்கு ஓர் ஒற்றடிப் பாதைவழியாகச்சென்றனர் அப்படிச் செல்லும்போது 2-ம் எதிரியாகிய நாகலிங்கமென்பவர் வந்து இராசையாவுடன் பேசினார். அப்போது நாகலிங்கம் கையில் ஒருபொல்லுவைத்திருந்தார். இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது எதிரியாகிய பஞ்சாட்சரம் வந்து இராசையாவுக்கு ஓர் கல்லால் தலையில் குத்தினார். 2ம் எதிரி ஓர் பொல்லால் மறுபக்கத்தில் அடித்தார். குணவாதனுபின்னுக்கு வந்தான். சில எதிரிகள் குணவாதனுவைத் தூரத்தினார்கள். அவன் வயிந்திலிங்கம் வீட்டுக்குள் ஓடினான். குணவாதனுவுக்குக் கல்லாலும் எறிந்தனர். இராசையா நிலத்தில் விழுந்துவிட்டார். காயமுற்றவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார்கள். அங்கு அவர் 13-ம் தேதி இறந்துவிட்டார்.

இதன்பின் டக்டர் திரு. சிமித் சாக்ஷியம் கூறினார். வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

மலாய்நாட்டில் அரிய தொண்டாற்றிய யாழ்ப்பாண மகன்

நமது யாழ்ப்பாணத்திலிருந்து உத்தியோகார்த்தமாக மலாய்நாடு சென்று செயற்கரிய செய்து தமக்குந் தம நாட்டினர்க்கும் அழியாப் புகழை நாட்டியவர்களுள் ஸ்ரீ. மா. வ. செல்லையபிள்ளை யவர்களும் ஒருவராவர்; இவர் தமது ஜகமுழுமியாகிய யாழ்ப்பாணத்தைவிட்டு மலாய் நாட்டிற் சென்று 36 வருட காலம் வன்மையில் அங்கு அரசினர் உத்தியோகத்தை வகித்துத் தம் கடமையை அரசினர்க்கும் ஊழியர்கட்கும் திருப்தியுண்டாகும்படி நடத்தியவர், பத்துக்காஜாவிலுள்ள கீதில்ஸ்தலத்தில் 27 வருடகாலம் முதலியாராகக் கடமை பார்த்து எப்பகுதியாராலும் பாராட்டப்பெற்றவர். இப்பெரியார் இவ்வளவில் (அமைவாது "செயற்கரிய செய்வர் பெரியார்...." என்னுங்கு தமது சாதி சமய முதலியவற்றின் விருத்தியையிட்டும் உழைக்கத் தலைப்பட்டார். அக்காட்டிலுள்ள தமிழ்ப்பிள்ளைகட்குத் தமிழைப் பயிற்றல் வேண்டுமென்ற நினைவாக்கொண்டு சய்காற் பாடசாலையை நிறுவியவர் இவரவர். பத்துக்காஜாவில் ஒரு சைவாலயத்தைத் தாபிக்க வேண்டுமென வேட்கைகொண்டு பல அன்பர்களுடைய உதவியைப் பெற்று ஸ்ரீசுப்பிரமணியப்பெருமானுக்கு ஆலயமொன்றை 4 வருட காலமாகக் கட்டி நிறைவேறச்சென்ற 1929-ம் ஆண்டில் மகா குடமுழுக்கு செய்வித்து அத்திருக்கோயிலில் நித்திய கைங்கரியங்கள முட்டின்றி இனிது நடைபெறுவண்ணஞ்செய்தவரும் இப் புண்ணியசீலரேயாவர். குறித்த ஆலயத்தை நன்கு பரிபாலித்தற்கும் சைவம் அக்காட்டில் வளரவுஞ் செய்யவேண்டிச் சைவபரிபாலன சங்கத்தையும் அங்குத் தாபித்தார். இன்னும் இப்பெரியார் அங்கும் அயல் நாடுகளிலும் செய்த கிலைபெற்ற நன்மைகள் பலவாம்.

இப்படியான இவர் இப்பொழுது தமது உத்தியோகத்திலிருந்து இனைப்பாறி, அங்குள்ள அபிமானிகளின் அன்பையும் உபசரணையையும் பெற்று அவர்களை அரிதிற்பிரிந்து மாது ஜகமுழுமிக்கு மீண்டுவந்து சண்டிருப்பாயில் வாழுகின்றாரென அறியலானோம் இவர் இநாட்டிலும் தமது சமயம் சாதி தேசம் பாஷை யென்னுமிவைகளின் விருத்தியையிட்டுப் புத்துக்கத்துடன் உழைக்குமவண்ணம் எல்லாமல்ல இறைவன் திரு. செல்லையபிள்ளையவர்கட்கு அரோகதிடகாத்திரத்தை நீடிய ஆயுளையும் அருளுவாராக.

நல்லூர்க் கந்தசுவாமிகோயில் மகோற்சவம்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருகிற வியாழக்கிழமை (23-7-36) பகல் தவஜாரோகணமாகி மகோற்சவம் நிரமமாகநடைபெறும். இம் மகோற்சவ காலத்தில நிகழவிருக்கும் பத்தாநாள் உற்சவத்தில் கலியுகவரதராகிய முத்தக்குமாரசுவாமியை எழுந்தருளச் செய்து திருவீதிவலம்வருதற்கு யாழ்ப்பாணம் பெரியகடை விநிமுகாந்திரம திரு. C. S K கந்தையா அவர்களால் இந்திய தபாலினைக் கொண்டு நவமாக ஒரு மஞ்சம் அமைக்கப் பெற்றுள்ளது. இதன் உயரம் 25 அடியாகும். இது இரண்டாக திருவீழாத் தினத்தன்று, அதாவது வருகிற வெளளிக் கிழமை (24-736) கொட்டடியி லிருந்து கொண்டுசேர்க்கப்பட்டு கோயிலிற் பல வரிசைகளுடன சேர்க்கப்படுமென அறியலானோம். இம் மஞ்சத்தைப் பற்றிய விளம்பரத்தை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்திலுங்காண்க.

தோட்டத் துரையின் மனைவியின் தற்கொலை

கார்பாலிக் திராவகம்உட்கொண்டதால்மரணம்

உதடுகள் வீங்கி இருந்தன

காவலப்பிட்டி ஜூலை 15.

கல்பொடையில் பென்ராஸ் தோட்டத் துரையின் மனைவியான ஸ்ரீமதி ஜேமிஸன் சென்ற திங்கட்கிழமை மாலையில் கார்பாலிக் திராவகத்தை உட்கொண்டதால் மாண்டாள். வீட்டு வேலைக்காரர்களைப் பற்றிக் கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஏற்பட்ட தகராறுதான் இதற்குக் காரணமென்று கூறப்படுகிறது. கால்கடைக் காவலாளி பாலுடன் தண்ணீர் கலந்து கொடுத்ததாக ஸ்ரீமதி ஜேமிஸன் கருதி அவன்மீது கோபமடைந்திருந்தாள்.

பகற்போஜனத்திற்குப்பின் திரு. ஜேமிஸன் தமபதிகள் ஸ்ரீமதி ஜேமிஸனின் மாமியார் முதலியோர் உட்கார்ந் திருக்கையில் தமபதிகளுக்குள் வாக்குவாத மேற்பட்டதாகக் கூறப்படுகிறது. மனைவி கோபமடைந் திருக்கும் சமையத்தில் திரு. ஜேமிஸன் அறையை விட்டு வெளியே போனாராம். 'இனி டங்களாவிலிருக்கமுடியாது' என்று ஸ்ரீமதி ஜேமிஸன் கூறிவிட்டுப் பள்ளியறைக்குப் போய் கார்பாலிக் திராவகத்தை உட்கொண்டதாகக் கூறப்படுகிறது. குழந்தை ஆயாவின் கையிலிருக்கையில் 'என அருமை மகனே!' என்று ஸ்ரீமதி ஜேமிஸன் கூறிக் குழந்தையை முத்தமிட்டுவிட்டுப் படுக்கையில் சாய்ந்தாள்.

ஸ்ரீமதி ஜேமிஸனின் பள்ளியறைக்குப்போய் சில நிமிஷங்களுக்கெல்லாம் அவளது கூச்சல் மாமியாருக்குக் கேட்டது. மாமியாரும் திரு. ஜேமிஸனும் பள்ளியறைக்கு ஓடினர். ஸ்ரீமதி ஜேமிஸன் வாய் பாதி திறந்திருக்கப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாளாம். அவளது உதடுகள் வீங்கியிருக்கக் காணப்பட்டன.

கார்பாலிக் திராவகப் போத்தலும் அதனருகில் அந்தத் திராவக வாசனை வீசும் கண்ணாடி டம்ளரும் கிடந்தன. தபாற் கூலி சின்னையாவை மருந்து கலக்து கொடுப்பவரை அழைத்து வரும்படி திரு ஜேமிஸன் கூறிவிட்டு காவலப்பிட்டி வைத்திய உத்தியோகத்தருக்குத் தகவல் கொடுத்தார்.

மருந்து கலந்து கொடுப்பவர் ஒரு கரண்டி ஆல்புமன் கொடுத்தார். ஆனால் ஸ்ரீமதி ஜேமிஸனால் அதை உட்கொள்ள முடியவில்லை. அவளது நாடி குன்றியது. டக்டர் வருமுன் மாலை 3-45 மணிக்கு அவள் இறந்துபோனாள்.

திரு. ஜேமிஸனுக்குக் கலியாணமாகி மூன்று வருஷங்களாயின. ஸ்ரீமதி ஜேமிஸனின் சகோதரர் திரு. ஜே. எப். டி. ஸ்டீவர்ட் தமது சகோதரி சென்ற பிரசவத்தின் பின்பு கோபக்காரியா மிருந்ததாகவும் மரணம் சம்பந்தமாக ஒருவரையும் தாம் சந்தேகிக்கவில்லை என்றும் கூறினார்.

கார்பாலிக் திராவகம் உட்கொண்டதால் மரணமேற்பட்ட தென்று மரணவிசாரணை யதிகாரி தீர்ப்புக் கூறினார்.

காலநிலை

சென்றவாரம் ஒரு தினங்களில் இங்கே மழை பெய்தது. சென்ற சனிக்கிழமையிரவு காற்றோடும் மின்னல் முழக்கத்தோடும் பெருமழை பெய்தது. இம்மழை இந்நகமையந்தில் வேண்டியதுதான் என்று சொல்லப்படுகிறது.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

சரஸ்வதி வித்தியாசாலை, வதுளை

மேற்படி வித்தியாசாலை ஆரம்பித்து இரண்டு வருஷங்களாகின்றன. இவ்வித்தியாசாலையை ஸ்தாபனஞ்செய்து சென்ற இரு வருஷங்களாக நடத்தி வந்தது வதுளையிலுள்ள சைவ பரிபாலன சங்கம ஆகும். சென்றவாரம் இவ்வித்தியாசாலையை மேற்படி சங்கம சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பொறுப்பில் விட்டிருக்கின்றது. வித்தியாசாலைக் கட்டிடமும் நிலமும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்கு கன்கொடையாக அளிக்கப் பெற்றுள்ளது. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சார்பாக அதன் பொது மனேஜராகிய திரு. சு. இராசரத்தினம் அவர்கள் வதுளைக்குச் சென்று அக் கொடையை ஏற்றார்.

இவ் வித்தியாசாலையோடு சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கீழுள்ள வித்தியா சாலைகளின் தொகை 83 ஆகின்றது.

கலகத்திற் கத்திக்குத்தா?

காயமுற்றவரது வாக்குமூலம்

கல்வியங்காட்டில் சென்ற வெள்ளிக்கிழமை இரவு கந்தையர் ஆறுமுகமும் வேறு சிலருமாக ஏதோ வாக்குவாதப்பட்டனர். அச் சச்தத்தைக் கேட்ட நாகலிங்கம் தம்பு என்பவருடைய வீட்டி லிருந்தவர்கள் இதனைத் தம்புவுக்கு அறிவிக்க, தம்பு உடனே படலையால் வெளியே சென்றார். அப்போது ஆறுமுகம் முதலியவர்களைக் கண்டார். இவர்களைக் கண்டதும் "ஏன் சண்டை பிடிக்கிறீர்கள்; சும்மாபோய் நித்திரையைக் கொள்ளுங்கள்" என்று கூற, ஆறுமுகம் சினங்கொண்டு தம்புவுக்கு ஓர் கத்தியால் மார்பிற் குத்தினார். காயக்காரன் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். காயக்காரன் ஆபத்தான நிலையி லிருப்பதால், சனிக்கிழமை பொலிஸ் நீதிபதி காயக்காரனது வாக்குமூலத்தை எடுத்தார் எனத் தெரியவருகிறது.

தெஹிவளை மிருகக் காட்சிச் சாலை

காண்டாமிருகம்; நீர் யானை; வரிக்குதிரை; ஒட்டகச்சிங்கி

ஓர் காண்டாமிருகம் ஓர் நீர்யானை ஓர் வரிக்குதிரை ஓர் ஒட்டைச் சிங்கி முதலியவை தெஹிவளை மிருகக காட்சிச் சாலைக்காகச் விரைவில் வாங்கப்படுமென்றுதெரிகிறது. இவை தங்குவதற்கு முதலில் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்ற மிருகக்காட்சிச்சாலை நிர்வாகக் கமிட்டி அப்பிராயப்படுகிறது. மேலும் வேறு நூதனப் பறவைகளும் காட்சிச் சாலைக்குக் கொண்டுவரப்படுமென்றும தெரிகிறது.

நிர்வாகக் கமிட்டியின் முதல்கூட்டம் ஜூலை மாதம் 8-ந் திகதி நடக்கது. தெஹிவளை மிருகக் காட்சி என்ற பெயரை "இலங்கைப் பிராணிகள் காட்சி" என்று மாற்ற வேண்டுமென்று கமிட்டி தீர்மானித்ததாகவும் பொதுவாகத் தற்சமயம் மிருகங்களும் பறவைகளும் நல்ல தேகஸ்திதியுடனிருப்பதாகக் கமிட்டியினர் அபிப்பிராயப்படுவதாகவும் தெரிகிறது அவை சௌகரியமாக விருக்க விசேஷ ஏற்பாடுகளைச் செய்யச் சர்வேயர் ஜெனரல் ஓர் பிளான் தயாரிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

ஹிட்லர் உயிர் தப்பினார்!

பிரதி ஹிட்லர் மாண்டார்!!

ஜர்மனிய சர்வாதிகாரியாகிய ஹெர் ஹிட்லர் தம்மை உருவத்திலும் உடையிலும் ஒக்க இன்னொருவரை உடன்கொண்டல்லாமல் வெளியே போவதில்லையாம். இப்படிச் செல்லுவதால் ஹிட்லரென்ற மதிக்கச் சத்துருக்கள் பிரதி ஹிட்லரைச் சுட அவர் மாண்டுபோக இவர் உயிர் தப்பியதண்டு. சென்ற இரண்டு மாசத்திற்கு முன்னும் ஹிட்லர் இந்தவிதமாக உயிர் தப்பியிருக்கிறார். அகாவது மே மீ 15உ ஹிட்லர் தம்மோடு ஒத்த உருவமும் உடையுமுடையவரும் தமது அங்கரங்காரியதரிசியாக்வுள்ளவருமான பூலியஸ் லிறெய்க் என்பவரை போட்டோகிராபின் பின்னுசனத்தில் இருக்கச் செய்துவிட்டு, தாம் சாதாரணமாக இருந்து ரதத்தைச் செலுத்திக் கொண்டு தமது நாட்டுப்புறத்து வீட்டிற்குப் போகும் மார்க்கத்தில் பகைவர் துப்பாக்கிப்பிரயோகஞ் செய்தனர் பிரதி ஹிட்லரையே உண்மையான ஹிட்லரென்று மதித்துச் சுட்டமையினால் ஹிட்லர் உயிர்தப்பி பிரதி ஹிட்லர் மாண்டார். பரண்ட பிரதி ஹிட்லரை அடக்கஞ் செய்யுக்கிரியைகள் அரசவரிசையோடு நடத்தப்பட்டனவாம்.

கிரிமலைத் தீர்த்தத்திலன்று நிகழ்ந்த சம்பவங்கள்

சீட்டாடினோருக்கு அபராதம்

தெல்லிப்பழையைச் சேர்ந்த முருகர் வல்லிபுரம் என்பவர் ஆடி அமாவாசைத் தினத்தன்று கிரிமலையில் சீட்டாடினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் இன்று அடிஷனல் பொலிஸ் நீதிபதி முன்பாக அவர் மீது வழக்குத் தொடரப் பட்டது. எதிரி தான் குற்றவாளி எனபதை ஒத்துக் கொண்டதன்பேரில் நீதிபதி எதிரிக்கு 10 ரூபா அபராதம் விதித்தார்.

சென்ற சனிக்கிழமையன்று கிரிமலைக்கு பாத்திரை செய்த சின்னப்பிள்ளை என்னும்மாதின் ஓலைப் பெட்டியையும் அதற்குள் இருந்த சீலைகளையும் திருடியதாக கந்தர் வல்லிபுரம் என்பவர்மீது ஒரு வழக்குத் தொடரப்பட்டது.

விசாரணை 24 ந் திகதிக்குத் தவணை யிடப்பட்டிருக்கிறது.

மகாகும்பாபிஷேகம்

வண்ணார்பண்ணை காட்டுத்துறையென்னுந் தலத்தில் எழுந்தருளிய கருணாகர வைரவ சுவாமிக்குச் சம்புரோடசண கும்பாபிஷேகமும், அத்தலத்தில்வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரசெல்வத்துரையவர்களால் நவமாக அமைக்கப்பட்ட ஆலயங்களில் விநாயகர் மகாமாரி உற்சவ பைரவர் உற்சவ மாரியம்மை வேல் ஆகிய மூர்த்திகட்கு மகா கும்பாபிஷேகமும்சென்ற வெள்ளிகிழமை (10-7-36) பகல் 11 மணிமேல் சிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. அன்று தொடக்கமாக நாள் தோறும் நண்பகலில் விசேஷ அபிடேகமும் ஆராதனையும் நடைபெறுவருகின்றன.

தேவை

அரசிலுள்ளதெற்கு சரஸ்வதிவித்தியாசாலைக்குப் பயிற்றப்பட்ட தமிழ் உபாதியாயர் ஒருவர் தேவை. ஆங்கிலமும் தெரிந்தவராயின்நன்று. வயது பிறமை முதலியவிபரங்களுடன் வித்தியாசாலை மனேஜருக்கு 1-8-36க்கு முன் விண்ணப்பம் அனுப்புக.

அ. சின்னையம்பலம்
சீராவியடி
யாழ்ப்பாணம்

Mis 89 20 & 23 · 7 · 36

மந்துவில் கற்பழித்த வழக்கு

எதிரிக்கு 3-வருஷக் கடுங்காவல்

மந்துவிலைச் சேர்ந்த இராசமணியைக் கற்பழிக்க எத்தனித்ததாகக் குற்றஞ் சாட்டிய வழக்கில் விசாரணையின் பின் ஜூரிகள் எதிரியைக் குற்றவாளியெனக் கண்டனர். நீதிபரசர் இக்குற்றத்திற்குத் தீர்க்க வேண்டியது 10 வருஷம் என்றும், ஆனால் தான் எதிரிக்கு 3 வருஷம் கடுங்காவல் மாத்திரமே தீர்ப்பதாகவும் கூறினார்

யாழ்ப்பாணச் சுருட்டு

"அதனைத்தான் நான் தினமும் உபயோகிப்பது"

சென்ற ஞாயிற்றுக்கிழமை (12-7-36) பரமேசுவராக்கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணப் புகையிலைச் சுருட்டு முயற்சியை மேலோங்கச்செய்வது எவ்வாறென்பதையிட்டு யோசிக்கும்நோக்கமாகப் புகையிலை வியாபாரிகள் சுருட்டுத்தொழில் முதலாளிமார் சுருட்டுத்தொழிற் செய்வோர் முதலானவரைக்கொண்ட ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அந்தச் சமையத்தில் திரு. S. நடேசனவர்கள் அவைத் தலைமை வகிக்க, அரசாங்கசபை மந்திரி மாநாள் ஒருவாகிய மிஸ்ரர் S. W. R. D. பண்டாரநாயக பின்வருமாறு கூறியுள்ளார்:-

"நான் எப்பொழுதும் யாழ்ப்பாணச் சுருட்டையே புகைத்துவருகிறேன்; அதனை உபயோகிக்கும்போது எனக்கு ஆநந்தமுண்டு; யாழ்ப்பாணச் சுருட்டினை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன், யாழ்ப்பாணத்தவர் செய்யும் சுருட்டுத்தொழிலோ மிகப் புராதனமானது; நாட்டுப்புறத்துள்ள சிங்களமக்கள் ஒவ்வொருவரும் அதனை விருப்பத்தோடு உபயோகித்து வந்தனர்; சுருட்டு வியாபாரமும் நன்கு நடைபெற்று வந்தது. ஆனால், காலகதியில் மலிவான 'பீடி" "சிக்கறற்" என்னுமிவைகள் இலங்கையிலே வந்து புகுந்துவிட்டமையினால் யாழ்ப்பாணச் சுருட்டு வியாபாரங் குன்றத் தலைப்பட்டது; அந்தச் சுருட்டுத் தொழிலை விருத்தி செய்வதற்காக வேண்டிய முயற்சிகளை நமது அரசாங்கத்தினர் இயன்றளவிற்கூச் செய்தல் வேண்டும். எனக்குச் சுருட்டுத்தொழின் முயற்சியைப் பற்றிய விபரங்கள் அதிகந் தெரியாது. ஆனாலும் இந்த மேலான தொழிலை விருத்தி பண்ணுதற்கு என்னால் இயன்ற மட்டும் முயற்சி செய்வேன்,

அவர் பேசியபின் திரு அ. மகாதேவ, மிஸ்ரர் P. மோஸஸ், ஸ்ரீ S நடேசன் ஆகிய இவர்களும் பேசினர்.

பழனியாண்டவர் திருவுருவப்படம்

சுப்பிரமணியக்கடவுளுடைய பாடிவீடுகளுள் ஒன்றாக விளங்கும் பழனி மம்பதியிற் கோயிலைகொண்டருளிய ஆண்டவரின் எழில்ய திருவுருவப் படம் பழனி மலைக்காட்சி தீர்த்தம் என்னுமிவைகளுடன் நன்கு அமைக்கப் பெற்றதாய் வரப்பெற்றோம். இப்படம் சைவமக்களுடைய இல்லங்கள் தோறும் வைத்துப் பூசிக்கத் தக்கதாகும். இதனை எமது பார்வைக்கு அனுப்பியவர் மேற்படி மலைக்கோவில் அயன் மிரஸ்தாராகிய திரு. பி. நடராச பண்டாரமவர்களாவர்; பிரதிகள் மேற்படி பண்டாரமவர்களிடத்திலும் யாழ்ப்பாணம் பெரியகடைத்தெரு அப்துல்லா கம்பனியாரிடத்திலும் பெறற்பாலது. எமது பார்வைக்கனுப்பிய படத்தை வந்தனத்துடன ஏற்றோம்.

தட்டாதெருக் கொலை வழக்கின் எதிரொலி

பொலிசார் எங்கே?

ஷை வழக்கில் சாட்சி பகர்ந்த கோட்டுப்புளி, சி. இராமலிங்கமென்பவர் இன்று காலை கலட்டி மரியம்மன் கோவில் ஒழுங்கையால் வரும்போதுகைபிழைபாட்டுக் கொலைக்குற்றத்துக்கு 5 வருட மறியல் தீர்த்த எதிரியின் கம்பி சு. சபாரத்தினென்பவரால் தலையில் வெட்டப்பட்டுக் காயமடைந்தாரென அறியலானோம். இதற்குமுன்னும் ஓர் சாட்சிக்காரன் சைக்கிளில் வரும்போது மறித்துத் தாக்கப்பட்டாராம்

கான்ஸ்டபிள் கட்டளையை மீறினடிரைவருக்குஅபராதம்.

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் ஆவணாவில் வசிக்கும் ஆறுமுகம்—நந்தசாமி என்னும் X. 8026 இலக்கமிடப்பட்ட பஸ்ஸை பொலிஸ்கான்ஸ்டபின் K. யோசேப் என்பவர் தனது கடமையின்பொருட்டு பஸ்ஸை மறித்தபோது டிரைவர் மறியாமலும் அவருக்கு மிஞ்சிட ஆட்களை ஏற்றிக் கொண்டும் சென்றதாயும் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி திரு. C. P. De சில்வா முன்பாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்காளிகான்ஸ்டபிள் கே. யோசேப் கூறியதாவது:—

சென்ற பங்குனிமீ 28உ பிற்பகல் 4-மணிபளவில் நான் கந்தர் மடத்தடிச் சந்தியில் X 8026 இலக்கப் பஸ்ஸை மறிக்கும்படி கையால் சைகை செய்தேன். அப்போது எதிரி தான் பஸ்ஸைச் செலுத்தி வந்தார். எனக்கு இவரை நன்றாகத் தெரியும்.

வழக்காளி குறுக்கு விசாரணை யின்போது, கூறியதாவது:—

நான் ஓர் சயிக்கிளில் அச்சந்திக்குச் சென்று சயிக்கிளை வைத்துவிட்டுப் பக்கத்தே இருந்த கடையொன்றில் தண்ணீர்குடித்தேன். குடித்துவிட்டுச் சயிக்கிளிருக்குமிடத்துக்குப் போகும்போது பஸ்ஸைக்கண்டேன். அந்தப் பஸ் பலாலிக்கு ஓடும் பஸ் அல்ல. அது பருத்தித்துறைக்கு ஓடும் பஸ் அல்லாமலும் அதிகம் ஆட்கள் ஏற்றி இருந்தபடியால்தான் இக்கள்ளவழியால் அது வருவதாக எண்ணி நான் அதை மறித்தேன்.

என்னுடன் கடராசாவும் வேறு இருவரும் நின்றார்கள். நான் கடராசாவிடம் கிடந்த கையை உயர்த்திக்காட்டி மறித்தேன். டிரைவர் விரைவாக வந்து சந்தியை அணுகியதும் மெதுவாக வந்து திரும்பி விரைவாக எண்ணியும் விலத்திக் கொண்டு சென்றார். நான் அப்போது உத்தியோக உடுப்புடன் நின்றேன். நான் விசிலும் பண்ணவில்லை.

நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு எதிரிக்கு 25 ரூ அபராதம் விதித்தார்.

மன்னரைக் கொல்ல முயற்சியா?

மாஹோம் என்றவன் குறிவைத்தெறிந்த துப்பாக்கி குதிரைமீது விழுந்தது

எதிரி உடனே கைதி ஆனான்

நேரில் நின்று கண்டவர்கள் கூறியவிவரங்கள்

லண்டன் ஜூலை 16—

இன்று காலையில் மன்னர் பிரான்ஸ்ஹாப்பர்க்கில் பாதுகாப்புப் படைகளுக்கு பட்டமளிக்கதுவிட்டுப் பக்கிஹாம் அரண்மனைக்குத் திரும்பிக்கள் பின்தொடரத் திரும்பிக்கொண்டிருக்கையில் ஜியார்ஜ் ஆண்ட்ரூமாக் மாஹன் என்ற ஓர் ஸ்கொட்லந்து மனிதன் மருந்து அடைக்கப் பட்ட ஒரு சுழற்றுப்பாக்கியுடன் மன்னர் பிரான்மீது குறி வைக்கும் பொருட்டுக் கூட்டத்தை இடித்துக்கொண்டு முன்னால் வந்தான்.

மன்னர்பிரான் மீது குறி வைப்பதற்கு முன்னர் ஓர் பொலிஸ் வீரன் துப்பாக்கியைக் கையிலிருந்து தட்டி விட்டான். துப்பாக்கி மன்னரின் குதிரைமீது விழுந்தது மன்னர் சிறிதும் கலக்கமடையவில்லை

ஜியார்ஜ் அண்ரூ உடனே கைது செய்யப்பட்டான். "நான் மன்னர் பிரானைக் கொல்ல விரும்ப வில்லை; என்னுடைய கண்டனத்தையே நான் தெரிவித்துக் கொண்டேன்" என்று ஜோஷ்அண்ரூ மார் வாஹன் பொலிஸ் அதிகாரிகளிடம் தெரிவித்தான்.

பவ்ட்ரீட் பொலிஸ் நீதிபதி மாக் மாஹன் ஒரு வாரம் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருக்கிறார். கோட்டைச் சுற்றிலும் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள்.

மாக்மாஹன் மோட்டாரில் பிரிக்ஸ்டன் சிறைச் சாலைக்குக் கொண்டு போகப்பட்டான். ஆயுத்திலிருந்து தப்பியதற்காக மன்னர் பிரானைப் பாராட்டி உலகத்தின் பல நாடுகளிலிருந்தும் செய்திகள் வந்திருக்கின்றன. ஹிட்லர் செயதி அனுப்பியிருக்கிறார். முஸோலினி டெலிபோனில் விசாரித்தார்.

முழு விவரம்

இன்று எட்வர்டு மன்னர் ஹைட்பார்க்கில் ராணுவப் படையைச் சேர்ந்தவர்களுக்குப் பாராட்டுச் சின்னங்கள் வழங்கியபின் குதிரை மீதேறிக்கொண்டு ஊர்வலமாகத் திரும்பி வருகையில், விசேஷ பாராப்பு உண்டாக்கத்தக்க ஓர் சம்பவம் நடைபெற்றது. அவர் அப்பார்க்கிலிருந்து சிறது தூரம் வந்ததும், கட்டத்திலிருந்த ஒருவன் ஏதோ ஒன்றை மன்னர்மீது வீசியதுபோல் காணப்பட்டது. பிறகு அதைக் கவனித்தில் அது ஒருசுழற்றுப்பாக்கியெனத் தெரிய வந்தது. அது மன்னரது குதிரையின் விலாப்புறத்தில் மோதியதும் குதிரை அதை உதைத்துத் தள்ளியது.

மன்னர் திரும்பிப் பார்த்து விட்டு சிறிதும் கவலைகொள்ளாதவராபோல் மேற்கொண்டு மெதுவாகத் தமது குதிரையைச் செலுத்திச் சென்றார்.

மன்னருடன் வந்த குதிரைப் பொலிஸ் படையைச் சேர்ந்த ஒருவர் தம் குதிரைமீதிருந்தே அக்குறற வாளியினைமீது பாய்ந்து, அருகிலிருந்தவர்களது உதவியைகொண்டு, அவனைப்பிடித்தார். மற்றப்பொலிசார் வந்து அவனைக்கைதுசெய்தனர்.

இன்னொருவன் கைதி

பொலீசார் அவனைக் கொண்டு செல்லுகையில் இன்னொரு மனிதன் பொலீசாரை நெருங்கினான். பொலிசாருக்கும் அவனுக்கும் சிறிது போராட்டம் நடந்தபின் அவனும் கைது செய்யப்பட்டான். இச் சம்பவத்தை நேரில் கண்ட இரு ஸ்திரீகளை ஒரு பொலிஸ் மோட்டாரில் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

ஒரு பத்திரிகைப் பிரதிநிதி இச் சம்பவத்தின் பொழுது எடுத்தபோட்டோ தலையில் தொப்பியின்றி விகாரமான உடை யுடுத்துக்கொண்டிருந்த குற்றவாளியை முன்று பொலிஸ்காரர்கள் ஒரு மோட்டாரை நோக்கி இழுத்துச் செல்வதைக் காட்டுகிறது.

மன்னரை நோக்கி வீசப்பட்ட சுழற்றுப்பாக்கி ஐந்து அறைகள் கொண்டதென்றும், அவைகளில் நான்கில் ரவைகள் இருந்தனவென்றும் ஸ்காட்லந்து யார்டுப் பொலிஸ் அதிகாரிகள் அறிவிக்கின்றன.

அத்துப்பாக்கியை வீசியவன் நின்ற பிற்பகல் போ தெருப் பொலிஸ் கோட்டில் கொண்டு செல்லப்படுவான். அவன்மீது துப்பாக்கிச் சட்டப்படி குற்றஞ்சாட்டப்படும்.

அவன் ஒரு அந்நியரல்லவென நம்பப் படுகிறது.

இச் சம்பவத்தை நேரில் கண்டவர்களனைவரும் மன்னர் தம் மனதமைதியைட் சிறிதும் இழக்கவில்லையென்றும் சம்பவத்திற்குப் பின்னும் அவர் ஓரே நிதானமாகச் சென்றாராகவும், ஒரு ஸ்திரீயும் ஒரு பொலிஸ்காரரும் அக் குற்றவாளியின் கையிலிருந்த துப்பாக்கியைத் தட்டி வீழ்த்துவதைப் பார்த்துக் கொண்டே மன்னர் சென்றதாகவும் ஒரு முகமாகக் கூறுகின்றனர்.

இன்னொரு விவரம்

சம்பவத்தை நேரில் கண்டவர்களில் ஒருவர் பின்வருமாறு தெரிவித்தார்:—

"மன்னரைச் சுடவந்தவன் தனக்கு முன்னுள்ள ஒரு பொலிஸ்காரர் அமர்ந்திருந்த குதிரை தனது பாரவையை மறைப்பதுகண்டு தயங்கி நிற்பதுபோல் தோன்றியது. பிறகு அவன் துப்பாக்கியை எடுத்து மன்னரை நோக்கி வீசினான். இதன் பேரில் மன்னரது முகத்தில் திடீரென்று கடுமை தோன்றியது அவர் அர் மனிதன் உள்ள திக்கில் திரும்பி அவருடன் குதிரைமீது வந்து கொண்டிருந்த குதிரைப்படை அதிகாரியான ஸர் ஜான் ஏர்ட்டன் பேசியதுபோல் காணப் பட்டது மன்னரின் காவலாளர் உடனே தமது குதிரையைத் திருப்பிச்சம்பவம் நடைபெற்ற ஸ்லத்துக்குச் சென்று குற்றவாளியைப் பிடித்த பொலிஸ்காரருடன் பேசினார்."

அக்குற்றவாளிகள் அருகேயிருந்த ஒரு ஸ்திரீ கூறியதாவது:—

'நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்குச் சில கஜ தூரத்திற்குப் பின்னாலிருந்து அம மனிதன் வந்தாரகத் தெரிகிறது. அவன் தனக்கு முன்னுள்ளவர்களை விலக்கிக்கொண்டு பாதசாரிகளுக்கென உள்ள மேடையின் முனைக்குச் சென்றான் கூட்டத்திலிருந்த யாரோ ஒருவர் 'அவனைப்பிடி, அவனைப்பிடி' எனக் கத்தினார் உடனே ஒரு ஸ்திரீ அவனை நோக்கி விரைந்துசென்றாள். அவன் ஸர்தா ஓரத்தில் நின்று கொண்டிருந்த பொலிஸ் படையை விலக்கிக் கொண்டு செல்ல முயன்றான். அக் நிலையில் அந்த ஸ்திரீயும் ஒரு போலீஸ் காரரும் அவன் கையிலிருந்த துப்பாக்கியை ஏக காலத்தில் தட்டவே அது ஸர்தாவை நோக்கிச் சென்று விழுந்தது'.

ஜனங்கள் அலறினர்.

அம்மனிதன் தனது துப்பாக்கியை வெளியே எடுத்தவுடன் ஜனங்கள் கூக்குரலிட்டு அலறி ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு அவனிருக்குமிடத்திற்குச் செல்ல முயன்றனரென்றும் அவன் தன் துப்பாக்கியைக் குறிவைக்கும் சமயத்தில் ஒரு கான்ஸ்டபிள் அவனது கையை மேல் நோக்கித் தாக்கினாரென்றும், பின்னர் ஜனங்கள் எல்லாப் புறங்களிலிருந்தும் அவனைத் தாக்கி வீழ்த்தினரென்றும். இச்சம்பவத்தை நேரில் கண்ட இன்னொருவர் தெரிவிக்கிறார்.

ஊர்லத்தில்மன்னருடன் சென்றவர்க் கோமகன் இச்சம்பவம் முழுதையும் நேரில் பார்த்துக்கொண்டிருந்தார்:

இச்சம்பவத்தால் மன்னரின் அலுவல் நிட்டம் பாதிக்கப்படவில்லை. அவர் சிறிது நேரம் பக்கிங்ஹாம் அரண்மனையில் தங்கியிருந்தபின், பகற்போஜனம் அருந்தவும் ராஜாங்கப் பத்திரங்களைப் பார்வையிடவும் ஸெயின்ட் ஜேம்ஸ் அரண்மனைக்குச் சென்றார்.

பின்னர் அவர் பெல்விடியர் கோட்டையிலுள்ள தமது (ஸ்காமக்கிர) மாளிகைக்குச் சென்றதங்கு 'கால்ப்' விளையாட்டிற் கலந்துகொண்டார்.

காமன்சில் அறிக்கை

லண்டன் ஜூலை 16—

மன்னரைக் கொல்ல முயற்சி செய்யப்பட்டது பற்றி இன்று காமன்ஸ் சபையில் மேஜர் அட்லி கேட்ட கேள்விகளுக்கு உள்காட்டிலாகா காரியதரிசியான ஸர் ஜான் ஸைமன் பதிலளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்:—

'இன்று காலை மன்னர் ஹைட்பார்க்கில் ராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பாராட்டுச் சின்னங்கள் வழங்கியபின் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு ஊர்வலமாகத் திரும்பி வருகையில் ஒரு மனிதன் தனக்கு முன்னிருந்த ஜனங்களை விலக்கிக் கொண்டு முன்வந்தான். பிறகு என்ன நடந்ததென்பது திட்டமாகத் தெரியவில்லை. ஆனால் மன்னருக்கும் திருப்புகளுக்குமிடையே ஒரு துப்பாக்கி வந்து விழுந்தது. அந்த ஸ்லத்திலேயே ஒருவன் கைது செய்யப்பட்டு ஹைட்பார்க்பொலிஸ் ஸ்டேஷனுக்குக்கொண்டு போகப்பட்டான். அத்துப்பாக்கி ஒரு முறைகூடப் பிரயோகிக்கப் படவில்லை. ஆனால் அதிலுள்ள ஐந்து அறைகளில் நான்கில் மட்டும் ரவைகள் இருந்தன. அம்மனிதன் இன்று பிற்பகல் போதெருப் பொலிஸ் கோர்ட்டிற்குக் கொண்டுசெல்லப்படுவான். மன்னருக்கு ஏற்பட்ட ஆபத்து இவ்வளவு துரிதமாகத் தவிர்க்கப்பட்டதுகண்டு இச் சபையினர் கடவுளுக்கு வந்தனம் செலுத்துவரென நம்புகிறேன்.

பின்னர் வந்தசெய்தி

மன்னர் மீது துப்பாக்கியை வீசினதாகச் சொல்லப்படும் மனிதனை மனமான கால்களுடையவனென்றும் அவனது பெயர் ஜார்ஜ் ஆண்ட்ரூ மாஹன் என்றும் அவன் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவனென்றும் சொல்லப்படுகிறது.

அவன் இன்றுநேரதெருப் பொலிஸ் கோர்ட்டில் பிறகு உயிருக்குஆபத்து விளைக்கும் கருத்துடன் சட்டவிரோதமாக ஒரு துப்பாக்கி வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டான்.

ஸர் ஜான் ஸைமன் செய்ததவறேதுமிதற்குக் காரணமென்றும் மன்னருக்கு எத்தகைய கேடும் இழைக்கத்தான விரும்பவில்லையென்றும் தனது எண்ணத்தை வெளிப்படுத்தவே தான் இவ்வாறு செய்ததாகவும் மாஹன் தம்மிடம் தெரிவித்ததாக ஒரு துப்பறியும் அதிகாரி தெரிவித்தார்.

மன்னரைத் தான் கொல்ல முயற்சிக்கவுமில்லை அவ்வாறு செய்ய உத்தேசிக்கவுமில்லையென மாஹன் தெரிவித்து விரும்புவதாக அவனுடைய வக்கில் புகன்றார்.

அவனை எட்டு நாள் வரை காவலில் வைக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

பிருத்தானியர் கடற்படையைப் பெலப்படுத்துகின்றனர்

பிருத்தானியர் இந்த ஆண்டில் 2 யுத்தக்கப்பல்களும், 7 குறுயிலர்க் கப்பல்களும், 18 டிஸ்திரோயர்க் கப்பல்களும், ஆகாயவிமானங் கொண்டு போகும் 2 கப்பல்களும 5 சிறிய யுத்தக்கப்பல்களும் அமைத்தற்கான ஏற்பாடுகள் செய்திருக்கின்றனராம்.

கந்தபுராணக் கவிநுட்பம்

கடவுள் வாழ்த்து

காண்பவன் முதலியவற்றை விளக்கியவாறு

காண்பவன் முதலிய திறமுள் காட்டுவான் மாண்புடை யோனுமாய் வலிகொள்வான் றொடர்
பூண்பதின் றுய்நலம் புணர்க்கும் புங்கவன் சேண்பொலிதிருநடச்செயலையேத்துவாம்

காண்பான் முதலிய மூவகைப்பொருளும் காட்டுவானுமாய்; வலிமையுடைய பாசமென்னுந் தளையைப் பூணுதலில்லாதவாய், ஆன்மாக்களுக்கு இதந்தைத் செய்கின்ற தலைவராகிய பாசிவனுடைய ஞானவெளியாகிய பொன்னம்பலத்தில் இயற்றப்படுகின்ற திருநடனமாகிய செயலைப் போற்றுகின்றேமென்பதுகருத்து.

காண்பவன்முதலியனற்றுகாண்பானையும் காட்சிப்பொருளையும் காட்சியையுமாகும். ஒருவன்ஒரு பகுவைக்காணும்போதுகாண்பவன் அந்த ஒருவனுவன்;காட்சிப்பொருள் பசு; அது பசுவென்ற அறிவே காட்சியாகும், ஆன்மா சிவத்தைக் காணுங்கால் அது சிவமாகவேண்டும். அப்போது காண்பவனாகிய ஆன்மாவும்காட்சிப்பொருளும் காட்சியும் காட்டுவோனும் சிவமேயாகும்.

"மூன்றய நன்மையவர் தம்மின் மிக முயங்கித் தோன்றதவின்பமதென்கொல்" என்பது திருவருட்பயன். பாசம் ஒலத்தில் அறுத்தற் கரிதாதலினாலும் நீடித்து நிற்றலாலும் வலிகொள்வான்றொடர் எனப்பட்டது தொடர்பூண் பதின்றாய் என்பது நிர்மலமாய்; நயம்புணர்த்தல் ஆன்மாக்களின் பாசத்தைத் தாமே நீக்கி விட்டிங்கனுப்புதல்; இப் பத்சகிருத்தியத் திருநடனமே ஆன்மாக்களின் பாசத்தை நீக்கி அவர்தம் ஈடேற்றும்படி செய்தற்காகிய கருமமாதலின் இந் நடனத்தை ஆசாரியசுவாமிகள் விசேடமாக வாழ்த்தியவாறும்.

மேல் ஆறு செய்யுட்களுள், முதற் செய்யுள் "உனத்துள் வைப்பாம்" என்று கடவுளைநினைத்தலையும், இரண்டாவது 'அன்பு செய்வாம்" என நினைத்தலால் வரும் அன்பு கொள்ளுதலையும், மூன்றவது "சேண்மி சேர்ந்துவாம்" என அன்பு கொள்ளுதலினால் வரும் காயவழிபாட்டிற் சிறந்ததாகிய தலையாற் றொழுதலையும், நான்காவதுமுதல் ஆறவது வரையும் வாயினாற்றொழுதலையுங் குறிக்கின்றன. அவற்றுள்ளும் நான்காவது "தலைமை யெய்நியே" என்றதனால் கடவுளின் சந்நிதிய தன்மையும், ஐந்தாவது "அங்கி யாயெழும்" என்று சிந்தாகிய தன்மையையும், ஆறவது "நயம்புணர்த்தும்" என்று ஆநந்த தன்மையையும் விசேடமாகத் துதிக்கின்றன.

கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. 7970

நில்லையம்பலம் நாகமுத்து காரரிடமேற்கு வழக்காளி

எதிர்

கச்சர் வேலுப்பிள்ளையும் பெண் கதிரகிப்பிள்ளையும் காரரிடு நிழக்கு எதிராளின் யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் 7970ம் இலக்க வழக்கில் எனக்குகிடைத்த சோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு தண்டுக்காணியை 1936ம் ஞு ஆவணி மீ 5வ புதன்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அதற்குக் காணிக்குள் நின்ற பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் நிவுப்பகுதி கழுவுமிலிறற் பிடாரிக் கட்டுபுலம் நிலப்பரப்பு காதும் பிளவுஞ் வடக்கு ஞும் வீதிகளும்.எல்லைமெற்குமவடக்கும் ஒழுக்கை மேற்கு வீரகதியார் அம்பலவாணருக்கும் பகுவானருக்குமுரிய ஆதனம். தெற்கு நிலம்பலம் ஆறுமுகதிற்கும் வீரகதியார் அம்பலவாணருக்குமுரிய ஆதனம்.

ச. ஆறுமுகம்
கொமிஷனர்.

காரரகர் 1936 ஞு ஆடி மீ 4வ.
Mis 83 20-7-36

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 8000.

1 மாகதன் V. E. R. நீக்கிலைன்
2 உருமபராய் 1-ம் வழக்காளியின் பெண் சாதி சோலட்சுமியம்மான் வழக்காளி

எதிரான.

கொண்டாவில் முருகேசு செல்லப்பா
,, முருகேசு சின்னப்பு எதிரின்.

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டின் 8000 ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த சோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படுகிறதும் தண்டுக்காணி 1936 - மஷு ஆவணிமீ 7 ௩வ வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அதற்குக்காணிக்குள் நின்ற பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வழக்காளிக்கு எதிராகவின் கொடுக்கவேண்டிய தொகை — ரூபா 1420 ம் இறக்கு 13 5 35 தொடக்கம் இறக்கும்வரைக்கும் வருஷம் 1-க்கு அறற்றுக்கு 9 வீத வட்டியும் செலவு ரூபா 140/41 ம். இதில் ரூபா 475 கொடுக்கப்பட்டது.

காணி விபரம்.

1. உரும்பராய இறை புண்ணிசச்சன் புலமும் மறுபிரியும் நிலபர. 34½ பரப்புக் இதின் தெற்கெல்லைக்காணிக்குரிய கிணற்றுப் பங்கும் செய்யிர்களும், எல்லை மெற்கு: காதிகேயர் ரணனியருக்கும் பங்காளருக்கு முடைய வாதனம், வடக்கு: முருகர் வலிமுதலுக்கும் பெண் சிவகாமனுக்கும் வேலாயுதர் பெண் லலாதரைக்கும், மேற்கு: கச்சர் பெண் சிவகாமன், தெற்கு: கீழ்ப் பிரிக்கப்படும் காணி, இதுகல்லில் சொரி பலாம் 10 பரப்புக் 7 $\frac{27}{40}$ குளியும்.

2. கொண்டாவில் இறை உப்பர்கிணறு பர. நில இலர. 39½ ம் வடக்கெல்லையி விருக்கும் கிணற்றில் பங்கும் செய்யிரும், எல்லை மெற்கு: காதிகேயர் ரணனியருக்கு பங்காளரும், வடக்கு: 1-ம் காணி, மேற்கு: கச்சர் பெண் சிவகாமனும் மறுபேரும், தெற்கு: பெரியான் பெண் காதிகேயி ஞரிமைக்காரருக்கும் பங்காளருக்கும் செல்லப்பா பெண் கனகதுக்கும் பங்காளருக்கும், இதுகல்லில் சொரியலாம் $\frac{1}{1440}$ பங்கு (11 பரப்புக் 15 குளியும் அதற்குமு மிறும் 5 தென்னைகளில் ½ வாரிப்பகுதியும்.

P. Rajaretnam,
கொமிஷனர்,

யாழ்ப்பாணம், 1936ஞு ஆடிமீ 19வ கிழமை.
(Mis 86. 20-7-36)

NOTICE OF SALE

விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டின் 9214ம் இலக்க வழக்கில் 1936 6 ஞு ஆனிமீ 18வ தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி மேலே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1936ஞு ஆவணிமீ 6 ௩வ தேதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அதற்குக் காணிக்குள் நின்ற பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வண்ணார்பண்ணை நிழக்கு செல்லப்பாதுரை வழக்காளி

எதிரான

தம்பையாளி (1) சரவணம் தம்பையாளுக்கு சென்ற T. நிருவுக்கரசின் ஆதனத்தகுதியுடையான் (2) T நிருவுக்கரசுமகம்பெண் நிருப்பிப்பின்னை தனிதும் பின்னாளின் பராமரிப்புக்காரி எதிரின்

எதிரின் வழக்காளிக்கு கொடுக்கவேண்டிய தொகை ரூபா 1594—80ம் இன்றும் 9-1-36 தவக்கம் இறக்கும் வரைக்கும் ரூபா 910/- க்கு வருட 1-க்கு 100க்கு 12 வீத வட்டியும் கோட்டுச் செலவும்

விபரம்

கொக்குவிலிலுள்ளும் தம்பையாளி பர. நில. இலர. 4½ ஏறறுப்பகுதியும் செப்பயிர்களும் தீடும் எல்லைமெற்கும் செற்கும் ஒழுக்கை வடக்கு சாவணமுதது பெண் தங்கரதிகுமாரனும் மேற்கு பொன்னுரதினதின் உரிமைக்காரருக்குரிய வாதனம்.

P. Rajaretnam,
கொமிஷனர்.

ஆடிமாசம் 19ம் கிழமை 1936.
(Mis. 88. 20-7-36)

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 8329

உரும்பராய் (1) வலிவாசா சட்டாதர்
(2) சின்னப்பு தம்பு
(3) பெண் ரேசம்மா

வழக்காளிகள்

எதிர்

உரும்பராய், கற்போது மலர்மாடு போட்டிங்ஸ் Sea View Estate 1. S பொன்ராசாவின்கம் சின்னத்துரை

உரும்பராய் 2 பெண் மேரிபாக்கியம்

எதிரானவி

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டின் 8329ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் தண்டுக்காணி 1936ஞு ஆவணிமீ 8வ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அதற்குக் காணிக்குள் நின்ற பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

எதிரின் வழக்காளிகளுக்குக் கொடுக்க வேண்டிய தொகை ரூபா 1421 ம் இன்றும் 12-7-35 தொடக்கம் இறக்கும் வரைக்கும் ரூபா 1000க்கு வருட 1-க்கு 12வீத வட்டியும் கோட்டுச் செலவும்.

காணி விபரம்

கோப்பாயிறை உரும்பிராயிலிருக்கும் குப்பிளான் பர. நில. இலர. 9½ வடக்கிலுள் வாய்பாரிற் பங்கும் எல்லைமெற்கு கற்பகப்பின்னையார்கோயிலுக்குச்சேர்ந்த ஆனைவட்டைக்கரசாரபெண் அன்னபூரணதினதும், ராசையுஞ்பெண் நிரத்தினதினதும், காலஞ்சென்றபுகர் பொன்னம்பலத்தின் உரிமைக்காரிகளுக்கும் மேற்கு பொன்னம்பலம் கைம்பெண் தங்கமுத்துவி ஆனை வெள்ளி கொளுத்து செலவிமாச இதுகல்லிலும் மேற்கு காணிக்குள்ளிருக்கும் கிணறின் தண்ணீர்ப்பங்கு வழியும் வாய்க்காலும் கொற்றுக்கு வடக்கெல்லை நிற்கும் தென்னைகளும் பிரயோசனமும் வடக்கிலுள்ளதும் மேற்கிலுள்ள 6 முள அலவு வழிப்பாவிப்பும்.

P. Rajaretnam,
கொமிஷனர்.

யாழ்ப்பாணம், 1936ஞு ஆடிமீ 19வ கிழமை.
(Mis. 87. 20-7-36.)

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குப் புதிய மஞ்சம்.

அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

சிவநேயச் செல்வர்காள்!

யாழ்ப்பாணம் "திருவிளங்க கரசபையார்" வழக்கமாக நல்லூர் ஸ்ரீ கந்தப் பெருமானது திருவாலயத்தில் பத்தாம்விழாவை நடத்தி வருகின்றமை எல்லோருக்குந் தெரிந்த விஷயமாகும். இவ் விழாவின்போது இறுவரை உபயோகிக்கப் பெற்று வந்த மஞ்சம் தற்போது சீரியநிலையில் இல்லாததால் அதற்குப் பதிலாக, இந்தியாவிலிருந்து எனனால் தருவிக்கப்பெற்ற கைதேர்ந்த சிற்பிகளால் ஒரு புதிய மஞ்சத்தை நான் செய்வித்திருக்கின்றேன். இப் புதிய மஞ்சம் நிகழும் தாது ஆண்டு ஆடித் திங்கள் கூம்நாள் (24—7—36) வெள்ளிக்கிழமை யன்று பிற்பகல் 2 மணியளவில் அத்த நட்சத்திரமும் பூர்வபக்ஷ சஷ்டிதிதியும் அமிர்தயோகமுங் கூடிய சுப முகூர்த்தத்தில் கொட்டடியில் உள்ள எமது "சுமசிவாய வித்தியாசாலை" யிலிருந்து மங்கல வாத்திய கோஷத்துடன் ஸ்ரீகந்தப் பெருமானது திருவாலயத்திற்குச் செல்ல ஆரம்பமாகும்.

முகாந்திரம் கந்தையாச்செட்டியார்

சைவாபிமானிகளாகிய அன்பர்கள் அனைவரையும் அத்தினத்தில் அங்குச் சமுகமளித்து இவ் விழாவைச்சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

அன்றியும், இத்திருமஞ்சம், கொட்டடிவீதி, பெரியகடைவீதி சிவன்கோவில்வீதி, காவலர்சந்தி, ஆனைப்பந்தியடிச்சந்தி ஆதியாம் வீதிகள் வழியாக ஆலயத்தைச் சேரவிருப்பதால், அவ் வழிகளில் குகனடியாராகிய புண்ணியவள்ளல்கள் அமைக்குந் தண்ணீர்ச்சாலைகள், இளைப்பாற்று மண்டபங்கள் ஆதியன இத் திருமஞ்சம் செல்வதற்குத் தடையாக ஏற்படக்கூடுமென அஞ்சுகின்றேன். ஆகவே, ஏறக்குறைய 25 அடி உயரம் 14 அடி அகலம் வாய்ந்த இத் திருமஞ்சம் செல்வதற்குத் தடையாக இருக்கக்கூடிய பந்தல்களையும் பிறவற்றையும் அன்பர்கள் அத்தினம் வரை அமையாதிருக்குமாறு நான் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
தங்களன்புள்ள
சி. ச. க. கந்தையாச்செட்டியார்.

பெரியகடை
7—7—36

Mis. 85. 20 & 23-7-36.

களவினாலாய வாக்க மளவிறந்

தாவது போலக் கெடும்.

கோடைகாலத்திற் பீடிக்கும்

தலைவலியைத் தடுப்பதற்காக

ஒரு போத்தல்

லிட்டில்ஸ் ஒரியண்டல்பாம்

தைலத்தை

வாங்கி வைத்திருங்கள்

இது வே

இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்

44. 1-1—31-12-36)

தலைவர்க்கு வரவேற்பு

வட்டுக்கோட்டைச் சைவாங்கிலவித்தியாசாலையிற் பெற்றோர் தினம்

வட்டுக்கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலையின் மானேஜராகிய கௌரவ திரு. வை துரைசுவாமி அவர்கள் அரசாங்க சபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பெற்றமின், அவ் வித்தியாசாலைப் பெற்றோர் தினத்தில் தலைமை வகிக்கவந்தமையே அவர் அங்கு முதன முதலாக வந்ததினமாகும். ஆதலின் அவரு அவருக்கு அவ்வித்தியாசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரு பொதுநுவரவேற்பளித்தனர். தலைவர் அவர்கள் வித்தியாசாலை வாயிலை அடைந்ததும், வித்தியாசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அவரை எதிர்சென்று வரவேற்கத் தலைமை ஆசிரியர், திரு சபாரத்தினசிங்கி அவர்கள் அவருக்கு மாலை சூட்டினர். இரு சிறுமியர் ஆலாத்தி எடுத்தனர். அதன் பின் தலைவர் அவர்கள் நிலைபரவரடைவிலமீது வித்தியாசாலை மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். மேளவாத்தியம் இசைமிழற்றியது. மண்டபத்தை அடைந்ததும், தேவாரபாராயணம் கடைபெற்றது. அதன்பின், நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்களால் இயற்றப்பெற்ற ஓர் வரவேற்புப்பா படி அளிக்கப் பெற்றது. தலைவரும், பணடைமாபு வழாது பாமாலை அளித்த புலவர்களுப பூமாலை சூட்டி அவரைக் கௌரவபடுத்திப் புலவரின் ஆற்றலைச் சிறிது நேரம் போற்றினர்.

அடுத்ததாக, வித்தியாசாலைப் பெற்றோர்தின விழாவில் தலைவர் தலைமை வகித்தார். இக்கூட்டத்திற பல நிகழ்ச்சிகள நடைபெற்றன. பல ஆடவரும் மகளிரும் அங்கு சமுகமளித்திருந்தனர். திரு. V.K. நாதன் B. A (வித்தியாதரிசி) அவர்களும், திரு. K.S. அருணாந்தி M. Sc (வடபகுதிப் பிரதம வித்தியாதரிசி) அவர்களும், திரு. V. விசுவலிங்கம் B. L. (மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர்) அவர்களும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். திரு A. தில்லைநாதர் அவர்களும திரு. S மருதமுத்து அவர்களும் குறிப்புரை கூறினர். புதிய கட்டிடம் பூர்த்தியாக்கப்படவேண்டியதின் அவசியத்தைப்பற்றித் தலைவரும் மற்றைய சொற்பொழிவாளர்களும் வற்புறுத்திப் பேசினார்கள். அடுத்த ஆண்டு நிறைவுக்கிடையிலேயே அக் கட்டிடத்தை நிறைவேற்றுவ பொறுப்பைத் தலைமையாசிரியர் ஏற்றுக் கொண்டார். கூட்டம் இனிது நிறைவெய்தியது. —கடித.

நியாயவாதிவீட்டிற் களவு போனமை

சென்றவாரம் யாரோ திருடர் யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள நியாயவாதி ஸ்ரீ. மாசிலாமணிவீட்டிற் பின்புறத்தாற் புகுந்து விருந்தையிலிருந்த காற்சட்டை மேற்சட்டை சேலைகள் சில பித்தளை வெங்கலப்பாத்திரங்களைத் திருடிச் சென்றுவிட்டனர். கள்வரைக் கண்டுபிடித்தற்குப் பொலிசார் முயற்சி செய்கிறார்களாம்.

விலைக் காணி

400 பரப்புத் திறமான பழைய கமம் குஞ்சுப் பரந்தன் கவண் மேன்றுப் பாடசாலைக்குச் சமீபத்தி லுள்ளதும் தற்போது கம்பி வேலியுமநீர்ப்பாய்ச்சலுமுடையது. விலை பரப்பு ரூபா 10 ஆகக் கையழிக்கப் படும்

RAJIAH,
Kalvalai, Manipay.

Mis. 80. 16—27-7-36.

சைவ பரிபாலன சபை.

1911-ம் 12-ம் ஆகளில் நிகழ்ந்தவை

(13-7-36ன் தொடர்)

"The Seventh Annual General Meeting

of the Board of Directors of the Jaffna Hindu College held in the College on Saturday, 30th September 1911 at 3-30 p. m. with Mr. V. Casippillai in the Chair.

Minutes of the 6th Annual General Meeting of 3rd September 1910 were read and confirmed.

The report of the Secretary for the year 1910—1911 was adopted.

The Balance sheet of the Treasurer was adopted.

The Report of the Auditor was adopted.

The Budget for the year 1911 — 1912 was passed.

At this stage the members of Section A retired,

The following gentlemen were re-elected;— Hon'ble Mr. A. Kanagasabai, Mr. R. Kantaiyah, C. M. Sinniyah Mudaliyar, Mr. C. Muthucumarasuriyar, Mr. S. Kanagaratnam Lawton, Mr. S. Thambyah pillai, Mr. R. Mailvaganam, Mr. M. S. Ramalingam, Mr. S. Kanagaratnam. The vacancy caused by the death of M. Sithamparanatha Mudaliyar was filled by the election of Mr. S. Thurayappah.

The office-bearers of the previous year were re-elected.

The members of the Standing Committee of the previous year were re-elected.

Mr. A. Cathiravelu and Mr. V. S. Ponnambalam were appointed visitors for the year 1911—1912.

At the last Annual General Meeting held on 3rd September 1910 the member of Section C. retired. The retiring members were re-elected with the exception of Mr. S Thurayappah in whose place Mr. T. Ponambalam Pillai was elected.

The total receipts during the year amounted to Rs. 31147-15½ and total expenditure Rs. 23554-11½ as against total receipts Rs. 32630-77 and total expenditure Rs. 17997-86 for the previous year. At the end of theyear the endowment fund was Rs. 7461-76 and permanent fund Rs. 22152-24 making a total of Rs 29614-00. Balance on hand on 30th June 1911 being Rs 28411-12½ the deficit is Rs 1202-87½.

The Buildings

The College buildings has been extended by the addition of a row of five class rooms put up on the southern side of the College premises. The rooms are very commodious and well ventilated. The building work in connection with the science laboratory has been for the present suspended for the lack of funds. The educated public who realise the value of modern scientific training will have to come to the relief of the College authorities by loosening their purse strings.

Urumpiray Hindu English School

The inauguration of the new building took place on the 8th of this month. Mr. G. Shiva Rau, B. A., L. T., Principal of the Hindu College, presided at the function and declared the new building open. He also appealed to the patriotic gentlemen of the place to help the school financially so that it might be placed on a sound footing.

The College Library

Over 400 volumes have been added to the library during the current quarter. There are now over 1225 volumes in the library. It is a very encouraging sign to see that a taste for reading books has been created among the boys of the College, who are making a very good of the books.

The Collge Reading Room

This institution is very largely used by the boys of the higher classes. The College Faculty is very thankful to Mr. T. Ponnambalam Pillai, Retired Excise Commissioner of Travancore, for supplying the reading room with the weekly edition of the "London Times" and to Mr. V. S. Guruatha Pillai, Forest Officer, Punganore Zemindary, for the daiiy edition of the "Madras Hindu." The reading room is also supplied with the "Ceylon Independent", the "Review of Reviews", the "Graphic", the "Indian Review", the "Shool World", the "Chums" and the "Indian Education", in addition to the local papers.

Examinations

Eight candidates took up the Cambridge Junior Local, fourteen the Cambridge Senior Local Examination held this month. The annual grant-in-aid examination was held from the 18th to 25th of November last 383 boys were presented for the examination. This year we are more strict in our promotions, and this is certain to have a very beneficial effect in raising the educational efficiency of theCollege as a whole."

உதவித்தமிழ்ப் பத்திராசிரியர் கல்லூரி மகசின்

1911 ஆ பங்குனி, ஆனி, புரட்டாதி, மார்கழி ஆகிய நான்கு மாதங்களிலும் இந்துக்கல்லூரிப் பழையமாணவசங்கத்தார் தங்கள் செலவில் கல்லூரி Magazine அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள். அவைகளில் கல்லூரியும் அதன் பழைய மாணவர்களும் எய்திய அபிவிருத்திகள் எல்லாம் விரிவாக வெளிவந்துள்ளன.

1912 ஆ தை மீ முதல் மட்டுவில் வே. திருஞானசம்பந்தப்பிள்ளை இந்துசாதனப் பத்திரிகையின் உதவிப்பத்திராசிரியராக நியமிக்கப் பெற்றுக் கடமைபார்த்துவந்தார்.

"Tirugnana Sambanda Murti Nayanar Vidyasalai Karativoe:- This school which was placed under the management of the Jaffna Hindu College about two years ago by Mr. M. Sayampu, has been registered by the Department of Public Instruction as an Elementary School. The union in aid of the school in the Federated Malay States, which has been maintaining the Headmaster for the last two years, has undertaken to continue its aid for another year in order to enable the school authorities to place it on a sound footing."

(தொடரும்)

யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00

100 ரூபா விதிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விதிதமாக 75 மாசாலாத்திற்கு மாசந்தோறுங் கட்டட்டவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எத்தொகையாகவுமாகலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சிறி சாரசி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 1 விதிதவட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யப்படலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம் 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்களையறுத்த வாறபோல் வட்டியும் முறையே 3 விதிதம், 4 விதிதம், 6 விதிதம், 8 விதிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "ராஷனல்" வங்கியிலும் "தும்பீறியல்" வங்கியிலுமா இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாகைகளான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

வகைகள் நடவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுமட்டிலுள்ளதுக்கு 10 விதிதமான வட்டியும், வேலையோர்க்கு 12 விதிதமான வட்டியும் விதிக்கப்படும். (நடவைத்தரங்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி நடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.

(Y-203. 21-11-35—20-11-36) மானேஜர்

அடைவுநடக விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டத்தின்படி கொன்ஸெல் பெற்ற அடைவு பிடிக்கும் வல்வெட்டித்துறை வே. வ. சிவப்பிரகாசம் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைப்பி மேற்படி சட்டதின் 12ம் பிரிவின்படி பிரசித்த எலதில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1935ம் ஆண்டு மாசி

கம்.	வ.	மு.	பெயர்	ஊர்	நகைகளின் விபரம்
1442	17	12	கனகசுந்தரம் ராமச்சந்திர	வல்வெட்டித்துறை	கற்றேடு சோடி 1
1457	23	12	கனகசுந்தரம் சிவராமிக்	கண்டி	வல்வெட்டித்துறை கற்றேடு சோடி 1
1461	25	10	அரையப்பா தங்காதரினம்	,,	வெப்புக்கல் அமுக்கு காதுத தோடு சோடி 1
செதிரை மாசம்					
1524	2	12	மாணிக்கம் இன்னாச்சி	ஊரிக்காடு	கற்றேடு சோடி 1
1525	3	9	சின்னையா ஆதயல		வல்வெட்டித்துறை கற்றேடு சோடி 1
வைகாசி மாசம்					
1610	2	10	மாணிக்கம் தங்கம்	,,	கற்றேடு சோடி 1
1624	10	6	கனகசுந்தரம் சிவராமிக்கண்டு	,,	திருகு பூ 1
1650	22	12	பொன்னுச்சாமி சோதிமுத்து	,,	கற்றேடு சோடி 1
1652	22	10	கந்தசாமி அன்னக்கண்டு	,,	கற்சுட் 1
1658	25	12	சபாபிப்பிள்ளை சின்னம்மா	,,	கற்றேடு சோடி 1
ஆனி மாசம்					
1685	5	10	செல்லத்துரை தங்கள்	,,	கற்றேடு சோடி 1
1715	17	13	தியாகராசா பொன்னுக்கண்டு	,,	கலாவரை மோதிரம் 1
1719	17	20	முருகுபிள்ளை லோகண்டு	,,	வெள்ளைக் கற்றேடு சோ. 1

விற்பனவு தாதவருஷம் ஆடிமாசம் 17ந் திகதிகுச் சரியான (1.8-36) சனிக்கிழமை காலை 10 மணிதொடக்கம் எடுக்கப்பட்டநகை பிறவிகளாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த எலதில் விற்கப்படும்.

வ. மு. கந்தசாமி,
வெந்நீக மேனேஜர்,
வல்வெட்டித்துறை.

(Mis. 81. 16 & 20 7 36.)

வீ. பீ. (நிக்கலஸ் அன் சன் வங்கி)

(1920-இல் ஸ்தாபிக்கப்பட்டது.)

2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

தந்தி விலாசம்: "ஜாவ்னுபாங்க்" தெலிபோன் இல. 27.

உண்டியல்:—கொழும்பு, இந்தியா, மலாயா முதலிய இடங்களுக்கு நேராகவும் உலகதில் வேறு பிரதான இடங்களுக்கு விசேஷ ஒழுங்கு செய்தும் உண்டியல் கொடுக்கப்படும்.

கடன்:—நகைகள் அடைவாகப்பெற்றுக்கொண்டு 12விதித வட்டிக்குப்பணங்கொடுக்கப்படும். தகுந்த பிணையுடன் தினசரிப் பற்றுவரவுக் கணக்கின் மேலாகவுங் கடனெடுக்கலாம்.

பணமாற்று:—இந்திய சிங்கப்பூர் நாணயங்கள், நோட்டுக்கள் வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கப்பற்றண்டு:—உலகதிறன்ன எந்தப் பிரதான துறைமுகதிறும்போய் இறங்கத்தக்காக, கம்பெனியிற் கப்பற்றண்டுகள் எடுத்துக்கொடுக்கப்படும்.

மேற் கூறப்பட்டவைகளும் இன்னுஞ் சகலவித வங்கிமுயற்சிகளும் எமது யாழ்ப்பாணவாட்டினரின் வசதிக்கேற்ற பிரகாரஞ் செய்யப்படும்.

எஸ். பீ. ஜோசேப்,
(Y. 188. 21-10-35—20-10-36.) மானேஜர்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

கனிஷ்ட பாடசாலை விடுகைத் தராதரப்பத்திர வகுப்பு (1937) [J.S.C.] இலக்கியக் குறிப்பு,

இது சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் 'வித்துவான்' பட்டம் வழங்கப்பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை, திரு. ந. சுப்பைய பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. பதவுரை, கருத்துரை, (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், சொல்லிலக்கணம், சொல் நயம், பொருள் நயம், அணிநயம் முதலியவற்றைவிளக்கும்) குறிப்புரை முதலியன அடங்கியுள்ளது.

கும்பிடு 1937-ம் ஆண்டு ஆங்கில J. S. C. வகுப்பிற் பயிலும் மாணவருக் ஆவசியகம் வேண்டியது. விலை சதம் 80.

செந்தமிழ் வாசக சிந்தாமணி

உயர்தர வகுப்புகட்கு உபயோகமானது. அரும்பத விளக்கம் செய்யுள்கட்கு உரை நன்கு எழுதப்பட்டுள்ளன.

விலை சதம் 75

சண்முகநாதன் புத்தகசாலை அதிபர்கள்.
வண்ணார்பண்ணை.

(Mis 12. 13-4-36.)

"NEW ERA SERIES" OF School Text Books

பாடசாலைகளுக்குரிய
புதிய தமிழ் நூல்கள்

செந்தமிழ்க் கருவூலம்
(1—3)
கதாவாசகம்
முதலியன.

அரசினர்
துவிபாஷா ஆசிரியர்
திரு. மா. பீதாம்பரன் அவர்கள்
Hd. Master (Ag.)
R. S. School,
Sainthamaruthu.

இயற்றியவை.

விரைவில் வெளிவரும்.

(Q. 22. 1-5-36—31-7-36)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளுங் கொடுத்திருக்கிறார்கள். இதை என்விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாரா, பீதானா, சாலாமுஸ்லி, சப்பேமுத்லிலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபரண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயுஇன்னுப அநேக கடுமையான வியாதிகள் தீருப்ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகுமநோய்கள்தீர்ந்துதேகபுஷ்டியும்பலமுமபெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ரூத்துக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்,

சிங்கப்பூர்பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மனியாடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
வெளான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்ற,
மட்டக்களப்பு

Y46 1-1-36 to 31-12-36) மேனேஜர்.

விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி, செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

1	பத்தி	(கலம்)	ரூபா	10-00
½	,,	,,	,,	5-50
¼	,,	,,	,,	3-00
1	அங்குலம்		,,	1-00

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் கேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை.

Nethrananda Thailaya

Ceylon's Premier Curative Medicine Oil.

நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.
தபாற்கூலி 45 சதம்.

இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை நீக்கி நிமிஷதிற்குள் சீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல வரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், கண்மயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலை மயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது விதியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகத்தர்களும், வியாபாரிகளும், மிகான் சொட்டிகளுமான யாவரும் அச்சம்பந்தி உபயோகித்து இதன் அரிய குணங்களைக் கண்டிருக்கிறார்கள். வெளிவந்திருக்கும் வேறு பொலிதலைவலிப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு ரீண்ட பெயர் உண்டு என்று ஊர்ஜிதமிரிற ஒவ்வொரு சிறபினர்க்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலைமயக்கம், கண் வரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்திலுள் யாவும் சுகமாகக்கப்படுகிறது. இது சற்காலதில் செய்யப்படும் போலித தைலதைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட் டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—

வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பொன்னுண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—

பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவிலி ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.

(H 332.0|20-3-36 to 19-9-36)

சிவன் வேம்புத் தைலம்

செம்மேகம், கருமேகப் பத்தங்கள், குஷ்டம், குறைநோய், அரிப்பு, சடிப்பு, சிரங்கு, கரப்பான் புண்களும்; விஷ கடிகள் மேகநோய், கக்கான்பத்தங்கள், சொறி சிரங்குகள்; கை கால் வலி, குடைச்சல் பிடிப்புவலி முதலிய சூலை நோய்கள்; அண்டவாதம், கண்டமாலை, அரையாப்பு, பெளந்திரம், விக்கப்புற்று ரணங்களும் ஆச்சரியமாய் குணமாகின்றன. ஊறல், பத்தி, ரணங்களுக்கு இதை மேற்குகும் பூசலாம். 12காள் புட்டி விலை ரூபா 2. 3 புட்டிவரை தபால் செலவு சதம் 75.

நாதேனக் கைவிடப்பட்ட கொடிய நோய்களெல்லாம் இதவரை ஆயிரக் ணக்கில் குணமாகிவிட்டன.

தாளக பஸ்பம்.

இருமல், இளைப்பு, கஷ்டகுவாசம், கபக்கட்டு, கோழை, சுரம், உடம்பு அனலாயிருத்தல், ஆகிய கோளாறுகளையும், மூக்கில் நீர்வடிதல், ரத்தம், நிரம்பி விழுதல், மூக்கடைப்பு, வாயில் நீறுலல், இளிப்புத் தோன்றல், பசி மந்தம், ஆகிய பீனிசக் கோளாறுகளையும் கண்டிப்பாய்க் குணமாகிறது.

இருமல், இளைப்பு சுகம்.

என்னைப் பதத்துருஷமாய்த் தடைப்படுத்திய இரத்தகாசம், சுவத்துடன் இரத்தம் விழுதல், தாகாறறம், நாள்வருத்த இருமல் எலலாம் நல்கள் "தாளக பஸ்பம்" சாப்பிட்டதில் இன்றுடன் 8 நாளில் கடவுள்செயலால் நல்ல சுகம்.

(Sd.) அ. செ. செய்யது இப்ராஹிம், திருக்கோணமலை.

தாளக பஸ்பம், அனுபானம், தாளிசபத்திரி சூரணம் உள்பட 20 நாள் மருந்து ரூபா 12-50.

குறிப்பு:—வெளிநாட்டுநண்பர்கள் ரூபா 5 அட்வான்ஸ் அனுப்பவும், கேட்டாக்கிரும்

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

(Q 19. 27-4 to 26-7-36) (PALNI. S. I.)

படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்

நடுவன்மை நாணுபவர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளந்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna on Monday, July 20th 1936.